بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ  نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ  وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

**Weekly BADAR Qadian Tamil**

தொகுதி 10

இதழ் 33

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - ஸஃபர் 19 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - ஸுஹூர் 14 ★ ஆகஸ்ட் 14 2025

## அல்லாஹ்வின் கட்டளை

فَاِذَا قَضَیۡتُمۡ مَّنَاسِکَکُمۡ فَاذۡکُرُوا اللّٰہَ کَذِکۡرِکُمۡ اٰبَآءَکُمۡ اَوۡ اَشَدَّ ذِکۡرًا

**பொருள்**

**பின்னர் நீங்கள் உங்களுடைய வணக்க முறைகளை முழுமையாக்கியதும் உங்களுடைய மூதாதையர்களை நினைவு கூருவது போன்று, அல்லது அதை விடவும் அதிகமாய் அல்லாஹ்வை நினைவு கூருங்கள்.**

**(அல்பக்கரா: 201)**

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நஃபில் (எனும் உபரியான இறை வணக்கம்) மூலமாக மனிதன் மாபெரும் அந்தஸ்தையும் நெருக்கத்தையும் பெற்றுக் கொள்கிறான் எந்த அளவுக்கு என்றால் “அல்லாஹ்வின் நேசர்கள் ” என்ற வட்டத்தில் இணைந்து விடுகின்றான்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

நினைவிற் கொள்ளுங்கள். இறைவனுடனான முழுமையான நேசம் என்பது நஃபில் மூலமாகவே கிடைக்கின்றது. அதன் விளைவு இவ்வாறு இருக்கின்றது: அதாவது இறைவன் கூறுகின்றான்: பின்னர் அத்தகைய நெருக்கம் பெற்ற, நம்பிக்கையாளரான அடியார்களின் பார்வையாக நான் ஆகிவிடுகின்றேன்; அதாவது எங்கு எனது விருப்பம் இருக்குமோ அங்குதான் அவர்களின் பார்வை படும். மேலும் அவர் இறைவனிடமிருந்து கவனமற்றவராக இருப்பதில்லை.

(இறை நேசர்களான) அவர்களின் காதுகளாக இறைவன் ஆகிவிடுகின்றான். இது இந்த விஷயத்தின் பக்கம் சுட்டிக் காட்டுகின்றது. அதாவது எங்கு அல்லாஹ் அல்லது அவனது தூதரோ அல்லது அவனது வேதமோ ஏளனமும், இழிவும் செய்யப்படுமோ அங்கிருந்து அவர் கவனத்தை விலக்கியவாறும், அதிருப்தியடைந்தும் எழுந்து நின்று விடுகின்றனர். அவர்களால் அந்த விஷயங்களை செவியேற்கவே முடியாது. மேலும், எந்த விஷயங்கள் அல்லாஹ்வின் திருப்தி மற்றும் கட்டளைக்கு எதிராக இருக்குமோ அது போன்ற எந்த விஷயங்களையும் அவர்களால் செவியேற்கவே முடியாது. அத்தகைய சபைகளில் அவர்கள் அமர்வதும் கிடையாது. அதேபோன்று தீயவர்கள் மற்றும் கயவர்களின் கூற்றுகள் மற்றும் அசுத்தமான காட்சிகள் மற்றும் குரல்களிலிருந்து அவர்கள் விலகிக் கொள்கின்றனர். அந்நியப் பெண்களின் குரல்களை செவியுற்று தீய எண்ணங்கள் உருவாகுவது என்பது زِنَا الۡاُذُنِ ஆகும். எனவே தான் இஸ்லாம் பர்தாவின் நடைமுறையை வைத்துள்ளது. நஃபில் (உபரியான இறை வணக்கம்) மூலமாக மனிதன் மாபெரும் அந்தஸ்தையும் நெருக்கத்தையும் பெற்றுக் கொள்கிறான் எந்த அளவுக்கு என்றால் அல்லாஹ்வின் நேசர்கள் என்ற வட்டத்தில் இணைந்து விடுகின்றான்.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 80-81, 2018-ம் ஆண்டு காதியான் பதிப்பு )

## உண்மையான நம்பிக்கையாளர் எல்லா வகையான தொழுகைகளையும் அதாவது கடமையாக்கப்பட்டவை மற்றும் உபரியான இறை வணக்கங்கள் போன்றவற்றை சிறந்த முறையில் நிறைவேற்றுகின்றார்

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல் முஃமினூன் வசனம் 10-ன் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இங்கு தொழுகைக்கான சொல்லானது பன்மையின் வடிவில் வந்துள்ளது. எனவே இதிலிருந்து ஒன்று இந்த விஷயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது: அதாவது அவர்கள் எல்லா வகையான தொழுகைகளையும் அதாவது கடமையாக்கப்பட்டவைகளையும், உபரியான இறை வணக்கங்களையும் சிறந்த முறையில் நிறைவேற்றுகின்றனர். மேலும் இரண்டாவதாக, இதில் இந்த விஷயம் கூறப்பட்டுள்ளது: அதாவது, அவர்கள் தமது சமுதாயத்தில் ஒவ்வொருவரின் பௌதீக இறை வணக்கங்களையும் பாதுகாக்கின்றனர். அதாவது, தங்களின் சந்ததிகளும், தங்களின் மனைவிமார்களும், அவர்களின் உறவினர்களும் மற்றும் அவர்களின் அண்டை அயலார்களும் மேலும் அவர்களின் அனைத்து சமுதாயமும் தொழுகையை பேணுகின்றனரா? இல்லையா? என்பதை அவர்கள் கண்காணித்து வருகின்றனர். ஏனெனில் முழுக் குடும்பத்தின் இன்னும் கூறப்போனால் முழு சமுதாயத்தின் அமல்கள் சரியானதாக இருக்காத வரை தனிமனிதனின் செயலும் அபாயத்திற்கு அப்பாற்றப்பட்டதாக இருப்பதில்லை. ஒரு நபர் காலையில் தனது பிள்ளையை தொழுகைக்காக எழுப்புகின்றபோது அந்நேரத்தில் உடனடியாக பாச உணர்வுகள் முன்னால் வந்துவிடுகின்றன. மேலும், கடும் குளிராக இருக்கின்றது ; நான் ஏன் இவரை எழுப்ப வேண்டும்? என்று மனதில் கூறுகின்றார். பின்னர் அவர் மனைவியை தொழுகைக்காக எழுப்பும்போது அப்போதும் பாச உணர்வுகள் அவருக்கு முன்னால் வந்து விடுகின்றன. சுருக்கமாக, ஒவ்வோர் அடியிலும் பாச உணர்ச்சிகளும், உணர்வுகளும் அவருக்கு முன்னால் வந்து விடுகின்றன. அதன் விளைவு என்னவாக இருக்கின்றது என்றால், அவர்களுடைய சீர்திருத்தமும் ஏற்படுவதில்லை ; அவருடைய சீர்திருத்தமும் ஏற்படுவதில்லை.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 134)

## நபிமொழி

### நபித்தோழர்களின் மீதான நேசம்

ஹஸ்ரத் மிஸ்வர் பின் முக்ரிமஃ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சில சிறிது மேலங்கிகள் வந்தன. அப்போது எனது தந்தையார் முக்ரிமஃ (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் செல்வதற்கு என்னுடன் வாருங்கள்; அவற்றிலிருந்து நமக்கும் கொடுத்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. எனது தந்தையார் வாசலில் நின்று கொண்டார்கள். மேலும் பேசிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரின் குரலை அடையாளம் கண்டு கொண்டு விட்டார்கள். மேலும் வெளியில் வந்தார்கள். அன்னாரிடம் ஒரு மேலங்கி இருந்தது. அன்னார் (ஸல்) அவருக்கு அந்த மேலங்கியின் சிறப்புகளை விளக்கத் துவங்கினார்கள்.

மேலும், இதனை நான் உங்களுக்காக ஒளித்து வைத்திருந்தேன் என்றும் அன்னார் (ஸல்) கூறிக் கொண்டிருந்தார்கள்.

* * * * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்

:.போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**மக்கா வெற்றிப் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் போது மக்காவில் நுழையும்போது** اَللّٰهُمَّ اِنَّ الْعَيْشَ عَيْشُ الْاٰخِرَةِ **என்று கூறினார்கள்.**

பொருள்:

: அல்லாஹ்வே! அசல் வாழ்க்கை மறுமை வாழ்வே ஆகும்.

அன்னார் (ஸல்) தடியை முனையில் பிடித்தார்கள். மேலும், அன்னார் (ஸல்) ஒவ்வொரு சிலையையும் கடந்து செல்லும்போதெல்லாம், அந்தக் தடியைக் கொண்டு சிலையின் மீது அடித்துக் கொண்டே சென்றார்கள் ; மேலும், .

جَآءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ اِنَّ الْبَاطِلَ كَانَ زَهُوْقًا۔

என்று கூறினார்கள்.

மக்காவில் எந்த மக்கள் துன்பமிழைத்திருந்தார்களோ, அன்னார் (ஸல்) மக்காவை வெற்றி கொண்டபோது, அன்னார் (ஸல்) விரும்பியிருந்தால் அனைவரையும் கொலை செய்திருக்கலாம். ஆனால், அன்னார் (ஸல்) கருணை காட்டினார்கள்! மேலும்,

لَا تَثْرِيْبَ عَلَيْكُمُ الْيَوْمَ

( யூஸுஃப்: 93) என்று கூறிவிட்டார்கள்.

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 04 ஜுலை 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **வஃபா** மாதம் **04 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

மக்கா வெற்றி தொடர்பாகவும், மக்காவிற்குள் நுழைந்த சூழ்நிலைகள் குறித்தும் கடந்த குத்பாவில் எடுத்துரைக்கப்பட்டிருந்தது. அதன் கூடுதல் விபரங்கள் இவ்வாறு ஆகும்:

தன்னைக் கடந்து சென்ற வலிமை மிக்க இறைவனின் படைகளை அபூ ஸுஃப்யான் பார்த்து விட்டு மக்கா வந்தடைந்தபோது, முஸ்லிம்கள் புனித பள்ளியிலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ள மக்காவில் உள்ள ஒரு குடியேற்றமான ஸீ துவாவை வந்தடைந்து இருந்னர் என்றும், ஸஹாபிகள் அங்கு வந்தடைந்து, பெருமானார் (ஸல்) அவர்களுக்காக காத்திருந்தனர்; மேலும் எதுவரை என்றால் அனைத்து ஸஹாபிகளும் அங்கேயே ஒன்றுதிரண்டு விட்டனர்; மேலும், பெருமானார் (ஸல்) தமது பச்சை நிற உடை அணிந்த படையுடன் வந்தார்கள் என்றும் இப்னு இஸ்ஹாக் எழுதியுள்ளார்.

இப்னு ஸஅது இவ்வாறு எழுதியுள்ளார்: அதாவது அன்னார் (ஸல்) தமது ஒட்டகமான கஸ்வாவில் ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களுக்கும், உஸைது பின் ஹுளைருக்குமிடையில் இருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் முஃகஃப்பல் அறிவிக்கின்றார்கள்:

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கண்டேன். மக்கா வெற்றியின் நாளன்று அன்னார் (ஸல்) தமது ஒட்டகத்தின் மீது இருந்தார்கள். மேலும், அன்னார் (ஸல்) ஸூரா ஃபத்ஹ் எனும் ஸூராவை ஓதிக் கொண்டிருந்தார்கள். இது புஹாரீயின் அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அன்னார் (ஸல்) புனித மக்காவில் நுழைந்தபோது, மக்கள் அன்னாரை சந்திப்பதற்காக வருகை தந்தனர். பணிவின் காரணமாக அன்னாரின் தலை ஒட்டகத்தின் சேணத்தை தொட்டுக் கொண்டிருந்தது. அதாவது ஒட்டகத்தின் இருக்கையில் எங்கு அன்னார் (ஸல்) அமர்ந்திருந்தார்களோ அதன் பின்பகுதியை தொட்டுக் கொண்டிருந்தது. அன்னார் (ஸல்) புனித மக்காவில் நுழைந்தபோது, அன்னார் (ஸல்) கருப்பு நிற தலைப்பாகை அணிந்திருந்தார்கள். அன்னாரின் கொடியும் கருமை நிறமாக இருந்தது.

சில அறிவிப்புகளுக்கு ஏற்ப கொடி வெள்ளை நிறமாக இருந்தது. அன்னார் (ஸல்) ஸீ துவா என்ற இடத்தில் நின்று கொண்டார்கள். மேலும் அன்னார் (ஸல்) மக்களுக்கு மத்தியில் இருந்தார்கள். வெற்றி மற்றும் முஸ்லிம்களின் மிகுதியைக் கண்டு அன்னாரின் அருளுக்குரிய முடி பணிவின் காரணமாக ஒட்டகத்தின் சேணத்தை தொட்டுக் கொண்டிருந்தது அல்லது அதனை தொடுவதற்கு சமீபமாக இருந்தது.

அன்னார் (ஸல்) கூறினார்கள்:

اَللّٰهُمَّ اِنَّ الْعَيْشَ عَيْشُ الْاٰخِرَةِ

பொருள்: அல்லாஹ்வே! அசல் வாழ்க்கை மறுமை வாழ்வே ஆகும்.

நீதி, நேர்மை மற்றும் பணிவு, தாழ்மை குணம் ஆகியவற்றின் மற்றோர் அம்சம் இவ்வாறாக இருந்தது. அதாவது, அன்னார் (ஸல்) தமக்குப் பின்னால் தம்மால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான ஸைது பின் ஹாரிஸா அவர்களின் மகன் உஸாமா அவர்களை தமக்குப் பின்னால் சவாரி செய்ய வைத்திருந்தார்கள். அதேநேரம், குறைஷியர்களின் தலைவர்களும், பனூ ஹாஷிமின் மகன்களும் இருந்தனர். அன்னார் (ஸல்) அருளுக்குரிய ரமலானின் பத்தாம் தேதி மக்காவில் நுழைந்தார்கள். அப்போது சூரியன் சற்று உயர்ந்திருந்தது. (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 226, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்:

இறைவனின் சிறப்பான அடியார்களுக்கு வழங்கப்படுகின்ற இந்த மேன்மை என்பது பணிவின் வடிவில் இருக்கின்றது. மேலும், ஷைத்தானுடைய மேன்மை என்பது ஆணவத்துடன் கலந்திருக்கிறது. பாருங்கள்! இதே மக்காவில் எல்லாபுறமிருந்தும் அன்னாருக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டும், துன்பம் கொடுக்கப்பட்டும் கொண்டிருந்தபோது அந்த கடினங்கள் மற்றும் கஷ்டங்களின் நாட்களில் எவ்வாறு அன்னார் (ஸல்) சிரம் தாழ்த்தி ஸஜ்தா செய்து வந்தார்களோ அதேபோன்று நம்முடைய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொண்டபோது, தலையை தாழ்த்திக் கொண்டார்கள்; மேலும் ஸஜ்தா செய்தார்கள். தான் எந்த நிலையில் இங்கிருந்து சென்றிருந்தேன்! மேலும் எந்த நிலையில் தற்போது தான் வந்துள்ளேன்? என்பதை அன்னார் (ஸல்) கண்டபோது அன்னாரின் உள்ளம் இறைவனுக்கான நன்றியுணர்வினால் நிறைந்து விட்டது; மேலும் அன்னார் (ஸல்) ஸஜ்தா செய்தார்கள். (மல்ஃபூஸாத், தொகுதி 3, அடிக்குறிப்பு 260, 2022-ம் ஆண்டு பதிப்பு)

மக்கா வெற்றி நாளன்று அன்னார் (ஸல்) எங்கு தங்கியிருந்தார்கள்? என்பது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது மக்காவிற்கு அருகில் சென்றடைந்தபோது, மக்காவில் தாங்கள் எங்கு தங்குவீர்கள்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, அகீல், மக்காவில் ஏதாவது ஒரு வீட்டை எமக்காக விட்டு வைத்துள்ளாரா ? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள்.

அகீல் அவர்கள் ஹஸ்ரத் அபூதாலிப் (ரலி) அவர்களின் மகனாக இருந்தார்கள். இவர்கள் ஹுதைபியா உடன்படிக்கைக்கு சற்று முன்னர் இஸ்லாத்தை

தழுவியிருந்தார்கள். மேலும், அன்னார் (ரலி) அதற்கு முன்னர் சொத்துக்கள் அனைத்தையும் விற்றுவிட்டார்கள் என்று கூறப்படுகின்றது.

பின்னர் அன்னார் (ஸல்) கூறினார்கள்: எங்கு குறைஷியர்கள் நிராகரிப்பின் மீது சத்தியம் செய்திருந்தார்களோ அதாவது ஃஹைஃப் பனீ கினானஃ என்ற அந்த இடத்தில் நாம் தங்குவோம்; மேலும், அங்கேயே ஒன்றுகூடுங்கள் என்று அனைத்து ஸஹாபிகளுக்கும் கட்டளை வழங்கப்பட்டது.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அறிவிக்கின்றார்கள்: அந்த நாளில் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்து வந்த நபர்களில் ஒருவனாக இருந்தேன். மக்கா வெற்றி நாளில் நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடனேயே நுழைந்தேன்.மேலும், அன்னார் மக்காவின் வீடுகளைக் கண்டபோது, அன்னார் (ஸல்) நின்று விட்டார்கள். அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் புகழை எடுத்துரைத்தார்கள். அன்னார் (ஸல்) தமது கூடாரத்திற்கான இடத்தைக் கண்டார்கள். மேலும், கூறினார்கள்: ஜாபிரே! இது நாம் தங்குவதற்கான இடமாகும்; இதே இடத்தில் தான் குறைஷியர்கள் நமக்கு எதிராக குஃப்ர் நிலையில் சத்தியம் செய்திருந்தார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அப்போது, நான் மதீனாவில் அன்னாரிடமிருந்து செவியுற்ற அந்த விஷயம் நினைவுக்கு வந்து விட்டது. அன்னார் (ஸல்) கூறியிருந்தார்கள்: நாம் மக்காவை வெற்றிக் கொள்ளும்போது, நாம் ஹைஃப் பனீ கினானஃவில் தங்குவோம். அங்கு குஃப்ரின் நிலையில் மக்கத்து காஃபிர்களாகிய அவர்கள் “நாங்கள் பனூ ஹாஷிமிடமிருந்து கொடுக்கல் வாங்கல் செய்ய மாட்டோம் ; மேலும் அவர்களுடன் நிக்காஹ் செய்ய மாட்டோம்; மேலும் அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்க மாட்டோம்’’ என்று சத்தியம் செய்திருந்தார்கள். அவர்கள் ஷுஐப் அபீ தாலிப் பள்ளத்தாக்கில் சிறைபிடிக்கப்படும் நிர்பந்தத்திற்கு ஆளாக்கி விட்டனர்.

ஆலிம்களின் பார்வையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் நன்றியுணர்வை வெளிப்படுத்தும் விதமாக அப்போது அங்கு தங்குவதற்கு தீர்மானத்திருக்கக் கூடும்; ஏனெனில், இது சிலரின் எண்ணமாகும். சில அறிவிப்புகளுக்கு ஏற்ப மக்காவில் அன்னார் (ஸல்) அன்னாரது வீட்டில் அல்லாமல் வேறு ஒருவரின் வீட்டில் தங்குமாறு அன்னாரிடம் விண்ணப்பிக்கப்பட்டது. அன்னார் (ஸல்) மறுத்து விட்டார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்: நான் பிறரின் வீடுகளின் நுழைய மாட்டேன். ஹஸ்ரத் அபூ ராஃபிஃ (ரலி) ஹஜூனுடைய இடத்தில் அன்னாருடைய கூடாரத்தை அமைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அன்னாருடைய பரிசுத்த மனைவிமார்களில் ஹஸ்ரத் உம்மே ஸலமா (ரலி) அவர்களும், மைமூனா (ரலி) அவர்களும் இருந்தார்கள். அன்னார் (ஸல்) ஒவ்வொரு தொழுகைக்காகவும் ஹஜூனிலிருந்து மஸ்ஜித் ஹரம் வரை வருகை தந்து கொண்டிருந்தார்கள்.

(ஸுபுலுல் ஹுதா, தொகுதி5, பக்கம் 230 - 231, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) வரலாற்று நூல்களிலிருந்து சான்றுகளை எடுத்துரைக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்காவில் நுழைந்தபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் தங்களுடைய வீட்டில் தங்குவீர்களா? என்று அன்னாரிடம் கேட்கப்பட்டது. அதற்கு, அகீல் (இவர்கள் அன்னாருடைய சிறிய தந்தையாரின் மகன் ஆவார்கள்) எமக்காக வீடு எதையாவது விட்டு வைத்துள்ளாரா என்ன? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள்.

அதாவது எனது ஹிஜ்ரத்திற்கு பிறகு என்னுடைய உறவினர்கள் எனது அனைத்து சொத்துக்களையும் விற்று தின்று விட்டார்கள். தற்போது மக்காவில் எனக்கு தங்குமிடம் ஏதும் இல்லை என்று கூறினார்கள்.

பின்னர், நாம் ஃஹைஃப் பின் கினானஃவில் தங்குவோம் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

இது மக்காவின் ஒரு மைதானமாக இருந்தது. அங்கு (ஒரு காலத்தில்) குறைஷியர்களும், கினானஃ கோத்திரத்தாரும் இணைந்து இவ்வாறு சத்தியம் செய்திருந்தார்கள்:

அதாவது “நாங்கள் பனூ ஹாஷிம் மற்றும் பனூ அப்துல் முத்தலிப் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பிடித்து நம்மிடம் ஒப்படைத்து விடாத வரை, அவர்களுடன் தொடர்பு வைக்கவும் மாட்டோம் ; நாங்கள் அவர்களுடன் திருமண பந்தமும் செய்ய மாட்டோம்; கொடுக்கல் வாங்கலும் செய்ய மாட்டோம்’’ என்று சத்தியம் செய்திருந்தனர்.

இந்த உறுதிமொழிக்கு பிறகு இறைத் தூதர் (ஸல்) அவர்களும், அன்னாருடைய சிறிய தந்தையார் ஹஸ்ரத் அபூ தாலிப் (ரலி) அவர்களும் , அன்னாருடைய ஜமாஅத்தின் அனைத்து உறுப்பினர்களும் அபூ தாலிப் பள்ளத்தாக்கில் அடைக்கலம் புகுந்தனர். மேலும், மூன்று ஆண்டுகள் அவர்கள் கடும் துன்பங்களை எதிர் கொண்ட பிறகு அல்லாஹ் அவர்களுக்கு இரட்சிப்பு வழங்கினான். இறைத் தூதர் (ஸல்) அவர்களின் இந்த தேர்வு எவ்வளவு நுட்பமானதாக இருந்தது! மக்காவாசிகள் இதே இடத்தில் தான் (முன்னர்) சத்தியம் செய்திருந்தனர். அதாவது, முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை எங்களிடம் ஒப்படைக்காத வரை நாங்கள் அன்னாருடைய கோத்திரத்தாருடன் சமாதானம் செய்ய மாட்டோம் என்று சத்தியம் செய்திருந்தனர். “இன்று முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதே மைதானத்தில் சென்று இறங்கினார்கள்’’; ஒருவகையில் மக்காவாசிகளிடம், நீங்கள் எங்கு விரும்பியிருந்தீர்களோ அங்கு நான் வந்து விட்டேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஆனால், இன்று என்னை அநீதிகளின் இலக்காக ஆக்குவதற்கு உங்களிடம் வலிமை இருக்கின்றதா என்ன? கூறுங்கள்! என்று கேட்டார்கள். எங்கு நீங்கள் என்னை இழிவடைந்தவராகவும், கீழான வடிவிலும் பார்க்க விரும்பியிருந்தீர்களோ? மேலும், எனது சமுதாயம் என்னைப் பிடித்து எந்த இடத்தில் உங்களிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்று ஆசைப்பட்டிருந்தீர்களோ அங்கு நான் எப்படிப்பட்ட வடிவில் வந்திருக்கின்றேன் என்றால், எனது சமுதாயம் மட்டும் அல்ல; மாறாக முழு அரேபியாவும் என்னுடன் இருக்கின்றது; மேலும் எனது சமுதாயம் என்னை உங்களிடம் ஒப்படைக்கவில்லை ; மாறாக உங்களை எனது சமுதாயம் என்னிடம் ஒப்படைத்து இருக்கின்றது; இறைவனின் வல்லமை என்னவென்றால், இந்த நாளும் திங்கட்கிழமையாக இருந்தது. எந்த நாளன்று முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தவ்ர் குகையிலிருந்து வெளியேறி அபூ பக்ர் (ரலி) அவர்களின் தோழமையில் மட்டுமே மதீனாவின் பக்கம் ஹிஜ்ரத் செய்து சென்றிருந்தார்களோ அதே நாளன்று அன்னார் (ஸல்) ஏக்கத்துடன் தவ்ர் குன்றிலிருந்து மக்காவை ஏக்கத்துடன் பார்த்தவாறு இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள்:

அதாவது மக்காவே! நீ எனக்கு உலகில் அனைத்து நகரங்களையும் விட அதிக நேசத்திற்குரிய நகரம் ஆவாய்; ஆனால், உன்னுடைய குடிமக்கள் என்னை இந்த இடத்தில் வாழ அனுமதிக்கவில்லை. (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 344 - 345)

ஹஸ்ரத் உம்மே ஹானீ பின்த் அபீ தாலிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்காவின் மேல்பகுதியில் முகாமிட்டார்கள். அப்போது பனூ மக்ஸூம் கோத்திரத்தாரிலிருந்து என் கணவர் குடும்பத்து உறவினர்களில் இரு நபர்கள் என்னிடம் ஓடி வந்தனர். எனது சகோதரர் ஹஸ்ரத் அலீ (ரலி) என்னிடம் வந்தார். மேலும் அவர் கூறினார்: இறைவன் மீது ஆணையாக! நான் இந்த இருவரையும் கொன்று விடுவேன். நான் அந்த இருவருக்காகவும் எனது வீட்டில் கதவுகளை அடைத்து விட்டேன். பின்னர் நான் சுயமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மக்காவின் மேல் பகுதிக்கு சென்றேன். குழைத்த கோதுமை மாவின் அடையாளங்கள் இருந்த ஒரு பாத்திரத்தில் அன்னார் (ஸல்) நீராடிக் கொண்டிருந்ததை நான் கண்டேன். அந்த பாத்திரத்தில் அன்னாரின் மகள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஒரு துணியைக் கொண்டு அன்னாருக்கு திரையிட்டிருந்தார்கள். நீராடிய பிறகு அன்னார் (ஸல்) தமது ஆடையை மாற்றினார்கள். பின்னர் லுஹா நேரத்தின் எட்டு ரக்அத் தொழுகையை தொழுதார்கள். பின்னர் அன்னார் (ஸல்) என் பக்கம் கவனம் செலுத்தினார்கள். மேலும், உம்மே ஹானீயே! உமது வரவு நல்வரவு ஆகட்டும்!; நீங்கள் வந்ததன் நோக்கம் என்ன? என்று கேட்டார்கள். அன்னார் (ரலி) அந்த இருவரைக் குறித்தும், மேலும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தொடர்பான அனைத்து விவகாரத்தையும் கூறினார்கள். அதாவது இவ்வாறு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவர்களை கொலை செய்ய விரும்புகின்றார்கள் ; மேலும் நான் அவர்களை எனது வீட்டில் ஒளித்து வைத்துவிட்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: நீ எவருக்கு அடைக்கலம் கொடுத்துள்ளீரோ அவருக்கு நாம் அடைக்கலம் கொடுத்து விட்டோம்; மேலும் நீர் எவருக்கு பாதுகாப்பு வழங்கி விட்டீரோ அவருக்கு நாம் பாதுகாப்பு கொடுத்து விட்டோம்; எனவே அவர் அவர்கள் இருவரையும் கொலை செய்யக் கூடாது. அதாவது இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அந்த இருவரையும் கொலை செய்ய மாட்டார்கள். இந்த இரு நபர்களும் ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்களின் கணவர் தரப்பு உறவினர்களான ஹாரிஸ் பின் ஹிஷ்ஷாம் மற்றும் அப்துல்லாஹ் பின் ரபீஆஃ ஆகியோராக இருந்தனர்.

(அஸ்ஸீரத்துல் நபவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 744 -743)

புஹாரீயின் ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீ லைலா அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் லுஹா தொழுகையை தொழுததை பார்த்ததாக உம்மே ஹானீ (ரலி) அவர்களைத் தவிர எங்களிடம் வேறு எவரும் கூறவில்லை. அதாவது, இந்த அறிவிப்பானது உம்மே ஹானீ அவர்களுடையதாகும். அதாவது அன்னார் (ஸல்) லுஹா தொழுகையை தொழுது கொண்டிருந்தார்கள். மேலும் அதற்கு வேறு எந்த சாட்சியும் கிடைக்கவில்லை.

ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றி நாளன்று, அவர்களின் வீட்டிற்கு சென்றார்கள். மேலும், அன்னார் (ஸல்) நீராடினார்கள். மேலும், எட்டு ரக்அத்துகள் தொழுதார்கள். நான் அதை விட அதிக இலகுவான தொழுகையை ஒருபோதும் கண்டதில்லை. எனினும், அன்னார் (ஸல்) முழுமையாக ருகூ மற்றும் ஸஜ்தா செய்தார்கள். இது புஹாரியின் அறிவிப்பாகும். (ஸஹீஹுல் புஹாரீ, ஹதீஸ் எண்: 1176)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எட்டு ரக்அத்துகள் தொழுத தொழுகையைக் குறித்து ஆலிம்கள் பல்வேறு கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர். அதாவது, அது என்ன தொழுகையாக இருந்தது? என்பது பற்றி கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர். இது லுஹா அல்லது இஷ்ராக் தொழுகையாக இருந்தது என்று சிலர் கூறினர். ஒருவர் இந்த தொழுகையை இஷ்ராக் தொழுகை என்று கூறியுள்ளார். மேலும் வேறு ஒருவர், அது லுஹா தொழுகையாக இருந்தது என்று கூறியுள்ளார். சிலரைப் பொருத்த வரை இந்த தொழுகையானது ஒரு நகரம் அல்லது கோட்டை போன்றவற்றை வெற்றிக் கொண்ட பிறகு நன்றி தெரிவிக்கும் வகையில் தொழப்பட்ட வெற்றித் தொழுகையாக இருந்தது. மேலும் இதே சுன்னத்தின் அடிப்படையில் பின்னர் இஸ்லாத்தின் அமீர்மார்கள் வெற்றிகளுக்கு பிறகு எட்டு ரக்அத் தொழுகையை நிறைவேற்றத் துவங்கியிருந்தார்கள்.

மக்கா வெற்றியின் இரவு அன்று மிக முக்கியமான சில விவகாரங்களை கருத்தில் கொண்டிருந்தார்கள். அதன் காரணமாக ஹுஸுர் (ஸல்) அவர்கள் எந்த அளவிற்கு பணிகளில் மும்முரமாக இருந்தார்கள் என்றால், தஹஜ்ஜுத் தொழுவதற்கு நேரம் கிடைக்கவில்லை. எனவே ஹுஸுர் (ஸல்) அவர்கள் அதனை அந்த நேரத்தில் நிறைவேற்றினார்கள். அதாவது, காலை நேரத்தில் சூரியன் உதயமாகிய பிறகு. இதன் காரணமாகவே அநேகமாக இந்த விஷயம் உள்ளது. அதாவது, ஏதாவது காரணத்தினால் தஹஜ்ஜுத் தொழ முடியாமல் போய்விட்டால் பின்னர் காலை சூரியன் உதயமாகிய பிறகு எட்டு ரக்அத்துகள் தொழுதுவிட வேண்டும் என்ற விஷயம் உள்ளது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ஒருநாள் தஹஜ்ஜுத் தொழ முடியவில்லை என்றால், பின்னர் இஷ்ராக் தொழுகையாவது தொழுது கொள்ளுங்கள். (குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 22, பக்கம் 477, குத்பா பேருரை, செப்டம்பர் 19, 1941)

எப்போதாவது (தஹஜ்ஜுத்) தொழ முடியாமல் போனால், பின்னர் அன்னார் (ஸல்) தஹஜ்ஜுத் தொழுகைக்கு பகரமாக இஷ்ராக் தொழுகையை தொழுது வந்தார்கள் என்றும் சில அறிவிப்புகளில் கிடைக்கின்றது.

மீர் அப்பாஸ் ஸாஹிப் லூதியானாவியின் பெயரில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறினார்கள். அன்னார் அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதுகின்றார்கள்:

அன்றாடம் நீங்கள் செய்து வருகின்ற இந்த அனைத்து பணிகளையும் தொடர்ச்சியாக கடமையாக்கப்பட்ட நேரங்களில் செய்து வாருங்கள். எவற்றில் ஏதாவது ஒரு வகையான இணை வைத்தலோ அல்லது பித்அத்தோ இருக்குமோ அவற்றிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். இஷ்ராக் தொழுகையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிரந்தரமாக தொழுது வந்தார்கள் என்பது நிரூபணமாகவில்லை. அன்னார் (ஸல்) தொடர்ச்சியாக இஷ்ராக் தொழுகையை தொழுது வந்தார்கள் என்பது நிரூபணமாகவில்லை. தஹஜ்ஜுத் தொழுகை தொழ முடியாமல் போய்விட்டால் அல்லது பயணத்திலிருந்து திரும்பி வந்து தொழுது நிரூபணமாகியுள்ளது. எனினும், இறை வணக்கத்தில் முயற்சி செய்தும், கண்ணியத்திற்குரியவனின் வாசலில் கிடப்பதே சரியான சுன்னத் ஆகும். (மக்தூபாதே அஹ்மது, தொகுதி 1, பக்கம் 528,கடிதம் எண்: 15)

அதாவது இறை வணக்கம் மற்றும் இறை அடிமைத்துவத்தை பெறுவதற்கு முயற்ச செய்ய வேண்டும். மேலும், வல்ல இறைவனின் சன்னிதானத்தில் வீழ்ந்து கிடப்பதுவே அசல் சுன்னத் ஆகும்.

மஸ்ஜித் ஹரமில் நுழைவது மற்றும் வலம் வருவது பற்றிய குறிப்பு கிடைக்கின்றது. அன்னார் (ஸல்) பகலின் சிறிய பகுதியில் தமது கூடாரத்தில் அமர்ந்து கொண்டிருந்தார்கள். பின்னர் அன்னார் (ஸல்) கஸ்வா என்ற தமது ஒட்டகத்தை கொண்டு வரும்படி கூறினார்கள். அது அன்னாருடைய கூடாரத்தின் வாசலிற்கு அருகில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. அன்னார் (ஸல்) ஆயுதங்கள் ஏந்துவதற்கும், தலையில் கவசம் அணிவதற்கும் சென்று விட்டார்கள். ஸஹாபிகள் அன்னாரைச் சுற்றிலும் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். அன்னார் (ஸல்) தமது ஒட்டகத்தில் சவாரி செய்து கொண்டார்கள். கன்தமஃ என்ற இடத்திலிருந்து ஹஜுன் என்ற இடம் வரை குதிரைகளின் வளைந்த வரிசையில் அணிவகுத்து நின்று கொண்டிருந்தன. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அங்கிருந்து சென்று விட்டார்கள். அன்னாருடன் ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் இருந்தார்கள். அன்னார் (ஸல்) அன்னாருடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்தில் கதாஃ மலையின் பக்கத்திலிருந்து மக்காவில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் நுழைந்தபோது, பெண்கள் குதிரைகளின் முகத்தின் மீது தமது துப்பட்டாவை அடித்து அடித்து அவற்றை பின்னால் விலக்கிக் கொண்டிருப்பதை அன்னார் (ஸல்) கண்டார்கள். அப்போது அன்னார் (ஸல்) புன்சிரித்தவாறு,ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களைப் பார்த்தார்கள். மேலும், அபூ பக்ரே! ஹஸ்ஸான் பின் ஸாபித் என்ன கூறினார்? என்று கேட்டார்கள். அதாவது ஹஸ்ஸான் பின் ஸாபித் அவர்கள் ஒரு கவிதை கூறியிருந்தார்கள். அதைக் குறித்து விசாரித்தார்கள்.

ஆக, ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அந்தக் கவிதையைப் படித்தார்கள். அதன் பொருள் இவ்வாறாகும்:

ஒருவேளை நீங்கள் இப்படிப்பட்ட புழுதியை கிளப்பும் படையை பார்க்காமல் இருந்திருந்தால் நான் எனது அன்பிற்குரிய மகளை இழந்து இருப்பேன்; அவர்களின் வாக்குறுதிக்கான இடம் குதாஃ மலையாகும். அந்த அதி விரைவு குதிரைகள் தமது கடிவாளத்தை இழுத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றை பெண்கள் தங்களது துப்பட்டாவால் அடித்துக் கொண்டிருக்கின்றனர். குதிரைகளைப் பற்றி அவர்கள் இந்த சித்திரத்தை வரைந்துள்ளார்கள். மேலும் அந்த சம்பவமே அந்த நேரம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் மற்றும் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

மக்கா வெற்றி நாளன்று அன்னார் (ஸல்) புனித மக்காவில் நுழைந்தபோது, கஅபத்துல்லாஹ்வை சுற்றிலும் 360 சிலைகள் நிறுவப்பட்டிருந்தன. அவை கண்ணாடியுடன் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. ஹூபுல் மிகப் பெரிய சிலையாக இருந்தது. இது கஅபத்துல்லாஹ்விற்கு முன்னால் இருந்தது. இஸாஃப் மற்றும் நாயிலா போன்ற சிலைகள் மக்கள் எங்கு தமது விலங்குகளை பலி கொடுத்து வந்தனரோ அந்த இடத்தில் இருந்தன. அன்னார் (ஸல்) தடியை முனையில் பிடித்தார்கள். அன்னார் (ஸல்) ஒவ்வொரு சிலையையும் கடந்து செல்லும்போதெல்லாம், அந்தக் தடியைக் கொண்டு சிலையின் கண் மீது அடித்துக் கொண்டே சென்றார்கள் ; மேலும், .

جَآءَ الۡحَقُّ وَزَهَقَ الۡبَاطِلُ اِنَّ الۡبَاطِلَ كَانَ زَهُوۡقًا۔

என்று கூறினார்கள்.

உண்மை வந்து விட்டது; பொய் ஓடிவிட்டது; நிச்சயமாக பொய் ஓடி விடக் கூடிய ஒன்றே ஆகும்.

அன்னார் (ஸல்) கஅபத்துல்லாஹ்விற்கு அருகில் சென்றடைந்தார்கள். மேலும், அதனைக் கண்டார்கள். அன்னார் (ஸல்) தமது சவாரியில் அமர்ந்து கொண்டு முன்னேறிச் சென்றார்கள். மேலும், தமது தடியுடன் ஹிஜ்ரே அஸ்வதை முத்தமிட்டார்கள். மேலும் “அல்லாஹு அக்பர்” என்று கூறினார்கள். முஸ்லிம்களும் பதில் அளிக்கும் விதமாக “அல்லாஹு அக்பர்” என்று கூறினர். அவர்கள் மீண்டும் மீண்டும் தக்பீர் முழக்கங்களை முழங்கிக் கொண்டிருந்தனர். எந்த அளவுக்கு என்றால், மக்கா அல்லாஹு அக்பர் என்ற முழக்கத்தால் அதிர்ந்து கொண்டு இருந்தது. மேலும், அன்னார் (ஸல்) அவர்களை அமைதியாக இருக்கும்படி சைகை செய்தார்கள். மலைகளில் இருந்து கொண்டு இணை வைப்பாளர்கள் இந்தக் காட்சியை கண்டு கொண்டிருந்தனர். அன்னார் (ஸல்) பைத்துல்லாஹ்வை வலம் வந்தார்கள். ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா ஒட்டகத்தின் கடிவாளத்தைப் பிடித்திருந்தார்கள். அன்னார் (ஸல்) ஹிஜ்ரே அஸ்வதிற்கு அருகில் சென்றார்கள். மேலும், அதனை தொட்டார்கள். மேலும், பைத்துல்லாஹ்வை வலம் வந்தார்கள். அன்னார் (ஸல்) தவாஃப் செய்வதை நிறைவு செய்து விட்டபோது, தமது சவாரியை விட்டு கீழே இறங்கி வந்தார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் மஸ்ஜிதில்

ஒட்டகத்தை நிறுத்துவதற்கான இடம் கிடைக்கவில்லை. அப்போது அன்னார் (ஸல்) மக்களின் உள்ளங்கைகளில் இறங்கினார்கள். அதாவது, மக்கள் தமது கைகளை முன்னால் நீட்டினார்கள். அன்னார் (ஸல்) அதில் நின்று கொண்டு ஒட்டகத்திலிருந்து கீழே இறங்கினார்கள். ஒட்டகம் வெளியே கொண்டு செல்லப்பட்டது. ஹஸ்ரத் முஅம்மர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் வந்தார்கள். ஒட்டகத்தை அழைத்துக் கொண்டு பள்ளத்தாக்கிற்கு சென்று விட்டார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ஹாஃ என்ற இடத்தில் இருந்தபோது, நீங்கள் கஅபத்துல்லாஹ்விற்கு உள்ளே செல்லுங்கள்; மேலும், அதில் இருக்கின்ற எல்லா சித்திரங்களையும் அழித்து விடுங்கள் என்று அன்னார் (ஸல்) ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். அதில் இருந்த எல்லா சித்திரங்களும் அழிக்கப்படாத வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதில் நுழையவில்லை. -

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களின் சித்திரங்களும் கூட அகற்றப்பட்டன. அவர்கள் இருவரின் கைகளிலும் குறி பார்க்கக் கூடிய அம்பு இருந்தது. அவர்களுடைய சித்திரங்களும் அங்கு உருவாக்கப்பட்டிருந்தன அல்லது சிலைகள் உருவாக்கப்பட்டிருந்தன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த சித்திரங்களைக் கண்டபோது, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

அல்லாஹ்வே! இந்த சிலை வணங்கிகளை நீ அழித்து விடுவாயாக. இந்த இருவரும் அதாவது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மற்றும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) ஆகிய இந்த இருவரும் தமது கைகளில் பிடித்துக் கொண்டுள்ள அம்புகள் மூலம் ஒருபோதும் குறி பார்த்திருக்கவில்லை என்பதை இந்த சிலை வணங்கிகள் அறிந்துள்ளனர். இவர்கள் பொய்யான கதையை உருவாக்கியுள்ளனர். ஆனால், அவர்களோ ஒருபோதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. அன்னார் (ஸல்) மகாமே இப்ராஹீம் என்ற இடத்திற்கு வந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) கவசம் அணிந்திருந்தார்கள். அன்னார் (ஸல்) அங்கு இரண்டு ரக்அத்துகள் தொழுதார்கள். பின்னர் ஸம் ஸம் நீரூற்றின் பக்கம் சென்றுவிட்டார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் பின் அப்தில் முத்தலிப் அல்லது ஹஸ்ரத் அபூ ஸுஃப்யான் பின் ஹாரிஸ் பின் அப்தில் முத்தலிப் அன்னாருக்காக ஒரு குவளை நீரை இறைத்தார்கள். அன்னார் (ஸல்) அதிலிருந்து நீரை அருந்தினார்கள்.மேலும் உளூ செய்தார்கள். ஸஹாபிகள் வேக வேகமாக அன்னார் உளூ செய்த நீரை பெறத் தொடங்கிவிட்டனர். மேலும், அதனை தங்களது முகத்தில் தேய்த்துக் கொண்டனர். இணை வைப்பாளர்கள் அவர்களின் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்தனர். மேலும், நாம் இவ்வளவு பெரிய பேரரசரைப் பற்றிக் கேட்டதுமில்லை ; கண்டதுமில்லை என்று அவர்கள் கூறிக் கொண்டிருந்தனர். மக்கா வெற்றி கொள்ளப்பட்ட பிறகு, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹுபுல் சிலைக் குறித்து கட்டளையிட்டார்கள்.

ஆக, அது உடைக்கப்பட்டு விட்டது. மேலும், அன்னார் (ஸல்) அதற்கு அருகில் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது, அபூ ஸுஃப்யானே! ஹுபுல் சிலை உடைக்கப்பட்டு விட்டது; ஆனால், நீரோ உஹது போர் நாளன்று அது உங்கள் மீது அருள் புரிந்துள்ளது என்று அது தொடர்பாக பெரும் ஆணவம் கொண்டிருந்தீர். அதாவது ஹுபுல் சிலை உங்களுக்கு அருள் செய்துள்ளது என்று நீ அறிவிப்பு செய்தபோது ஆணவம் கொண்டிருந்தீர் என்று அபூ ஸுஃப்யானிடம் ஹஸ்ரத் ஸுபைர் பின் அவாம் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது, அவ்வாமின் மகனே! அந்த விஷயங்களை தற்போது விட்டு விடு!; ஏனெனில், ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் இறைவனைத் தவிர்த்து வேறு ஓர் இறைவன் இருந்திருந்தால் இன்று நிகழ்ந்தது நிகழ்ந்திருக்காது என்பதை நான் அறிந்து கொண்டு விட்டேன் என்று அபூ ஸுஃப்யான் கூறினார்.

இதன் பிறகு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கஅபத்துல்லாஹ்வின் ஒரு மூலையில் சென்று அமர்ந்து விட்டார்கள். மேலும், மக்கள் அன்னாரைச் சுற்றிலும் ஒன்றுகூடியிருந்தார்கள். (ஸுனன் அபூ தாவூத், ஹதீஸ் எண்: 4156)

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றி கொள்ளப்பட்ட நாளன்று அமர்ந்திருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் வாளை ஏந்திக் கொண்டு அன்னாரின் பாதுகாப்பிற்காக அன்னாரின் தலைமாட்டில் நின்று கொண்டிருந்தார்கள். (மஜ்மஉஸ் ஸவாயித், தொகுதி 6, பக்கம் 187, அறிவிப்பு எண்: 10252, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றி ஆண்டின்போது, உஸாமா பின் ஸைது (ரலி) அவர்களின் ஒட்டகத்தில் வருகை தந்தார்கள். பின்னர் உஸ்மான் பின் தல்ஹா (ரலி) அவர்களை அழைத்தார்கள். மேலும் கூறினார்கள்:

என்னிடம் திறவுகோலை கொண்டு வாருங்கள். அன்னார் தமது தாயாரிடம் சென்றார்கள். மேலும், அவர் கஅபத்துல்லாஹ்வின் திறவுகோலை கொடுப்பதற்கு மறுத்து விட்டார். அப்போது, அல்லாஹ்வின் மீது ஆணையாக! உமக்கு நிச்சயமாக இந்த திறவுகோலை கொடுக்க நேரிடும் என்று அவர் கூறினார். அவர் தமது தாயாரிடம் இவ்வாறு கூறினார் அல்லது வாள் எனது முதுகை கடந்து சென்று விடும். என்று கூறினார். அதாவது, கொடுக்கவில்லையென்றால் பின்னர் அதற்காக என் மீது கடுமை காட்டப்படும்; மேலும் அந்தக் கடுமை உம் மீதும் செய்யப்படும். மேலும் இறுதியில் கொடுக்கவே நேரிடும் என்று கூறினார்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்கள்: அப்போது அவர் திறவுகோலை கொடுத்து விட்டார். அன்னார் அதனை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். மேலும், அன்னாரிடம் கொடுத்து விட்டார்கள். அன்னார் (ஸல்) திறவுகோலை அவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டார்கள். மேலும், அன்னார் கதவைத் திறந்தார்கள். (ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஹஜ்,தொகுதி 6, பக்கம் 278, ஹதீஸ் எண்: 2345)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒஸாமா பின் ஸைது மற்றும் பிலால் பின் ரபாஹ் ஆகியோரை உடன் அழைத்துக் கொண்டு கஅபத்துல்லாஹ்விற்குள் சென்று விட்டார்கள். அப்போது கஅபாவின் திறவுகோலின் நிர்வாகியாக உஸ்மான் பின் தல்ஹாவும் உடன் இருந்தார். அன்னார் (ஸல்) கஅபத்துல்லாஹ்வின் கதவை அடைத்து விட்டார்கள். மேலும் நீண்ட நேரம் வரை அதற்குள் இருந்தார்கள். மேலும், இரண்டு ரக்அத்துகள் அங்கு தொழுதார்கள். வெளியில் கதவுக்கு அருகில் நின்று கொண்டிருந்த ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியில் வருகை தந்தபோது, நான் உடனடியாக உள்ளே சென்றேன். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இங்கு வந்திருந்தபோது என்ன செய்தார்கள்? என்று ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம் கேட்டேன். அன்னார் (ரலி) கூறினார்கள்: அன்னார் (ஸல்) ஒரு தூணை தமது வலப் பக்கமும் மற்றொரு தூணை இடதுப் பக்கமும்,மேலும் மூன்று தூண்களை தமது பின்பக்கமும் வைத்தார்கள். பைத்துல்லாஹ்வில் அப்போது ஆறு தூண்கள் இருந்தன. அப்போது, இரண்டு தூண்களுக்கு மத்தியில் நின்று கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் தொழுதார்கள். ஓர் அறிவிப்பிற்கு ஏற்ப, அன்னார் (ஸல்) தமது வலப் பக்கம் இரண்டு தூண்களையும், தமது இடப் பக்கமும் ஒரு தூணையும், மூன்று தூண்களை பின்பக்கமும் நிறுத்திக் கொண்டார்கள். அதாவது, முன்பும், பின்பும் இருந்த தூண்களை அன்னார் (ஸல்) இவ்வாறு பிரித்திருந்தார்கள். அதாவது இரண்டு ஒரு பக்கமாக ஆகிவிட்டது. ஒவ்வொரு பக்கமும் ஒரு தூண்கள், மேலும் பின்பக்கம் மூன்று தூண்கள் இருந்தன. எவ்வாறிருப்பினும், அன்னார் (ஸல்) அங்கு இரண்டு ரக்அத்துகள் தொழுதார்கள். ஸஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பாகும். (ஸஹீஹ் புஹாரி, கிதாபுஸ் ஸலாத், ஹதீஸ் எண்: 504- 505)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

மக்காவில் நுழையும் நேரத்தில் ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் அன்னாரின் ஒட்டகத்தின் கடிவாளத்தைப் பிடித்தவாறு, அன்னாருடன் உரையாடிக் கொண்டும் சென்று கொண்டிருந்தார்கள். மேலும், சூரா ஃபத்ஹ் அதாவது எந்த சூராவில் மக்கா வெற்றிக் குறித்து செய்தி வழங்கப்பட்டிருந்ததோ அதனையும் ஓதிக் கொண்டே சென்று கொண்டிருந்தார்கள். அன்னார் (ஸல்) நேராக கஅபத்துல்லாஹ்வின் பக்கம் சென்றார்கள். மேலும் ஒட்டகத்தில் அமர்ந்து கொண்டவாறே ஏழு முறை கஅபத்துல்லாஹ்வை தவாஃப் செய்தார்கள். அந்த நேரத்தில் அன்னாரின் கரத்தில் ஒரு தடி இருந்தது. கஅபத்துல்லாவை சுற்றி ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களும், அன்னாரின் மகனான இஸ்மாயீல் (அலை) அவர்களும் ஏக இறை வணக்கத்திற்காக கட்டியிருந்தார்கள். அதனை பிற்காலத்தில் அவர்களின் வழிகெட்டுப்போயிருந்த தலைமுறையினர் சிலைகளின் கருவூலமாக ஆக்கி வைத்திருந்தார்கள். அந்த இடத்தை அன்னார் (ஸல்) வலம் வந்தார்கள். மேலும் அவர்கள் அந்த இடத்தில் வைத்திருந்த 360 சிலைகளில் ஒவ்வொன்றின் மீதும் அன்னார் (ஸல்) தடியால் அடித்துக் கொண்டே சென்றார்கள். மேலும்,

جَآءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ اِنَّ الْبَاطِلَ كَانَ زَهُوْقًا۔

என்று கூறிக் கொண்டே சென்று

கொண்டிருந்தார்கள்.

இது எந்த வசனம் என்றால், இது ஹிஜ்ரத்திற்கு முன்னார் சூரா பனீ இஸ்ராயீலில் இறங்கியிருந்தது. மேலும் அதில் ஹிஜ்ரத் மற்றும் மக்கா வெற்றிக் குறித்த செய்தி வழங்கப்பட்டிருந்தது. இது ஹிஜ்ரத்திற்கு முன்பு இறங்கிய சூரா என்பதில் ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள் ஒருமித்த கருத்து கொண்டுள்ளனர். இந்த சூராவில் இந்தக் கருத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது:

وَقُلْ رَّبِّ أَدْخِلْنِيْ مُدْخَلَ صِدْقٍ وَّ اَخْرِجْنِيْ مُخْرَجَ صِدْقٍ
وَّ اجْعَلْ لِّيْ مِنْ لَّدُنْكَ سُلْطٰنًا نَّصِيْرًا -
وَقُلْ جَآءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ اِنَّ الْبَاطِلَ كَانَ زَهُوْقًا

பொருள்: நீர் கூறுவீராக! எனது இறைவா! என்னை இந்த நகரத்தில் அதாவது மக்காவில் நல்ல நிலையில் நுழையச் செய்வாயாக!

அதாவது ஹிஜ்ரத்திற்கு பிறகு வெற்றியும் மேன்மையும் வழங்கி நுழையச் செய்வாயாக! மேலும், இந்த நகரத்திலிருந்து பாதுகாப்பாக வெளியேற்றி விடுவாயாக! அதாவது ஹிஜ்ரத்தின் நேரத்தில். மேலும் உன் புறமிருந்து எனக்கு வெற்றியையும், உதவிக்கான ஏற்பாடுகளை செய்து தருவாயாக! மேலும் இவ்வாறு கூறுவீராக! உண்மை வந்து விட்டது; பொய் அதாவத இணை வைத்தல் தோல்வியுற்று ஓடிவிட்டது. மேலும் பொய் அதாவது ஷிர்க் தோல்வியுற்று ஓடுவது என்பது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. (சூரா பனீ இஸ்ராயீல்: 81)

இந்த முன்னறிவிப்பு சொல்லுக்கு சொல் முழுமையடைந்தபோதும், ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் அதனை திலாவத் செய்த நேரத்திலும் முஸ்லிம்கள் மற்றும் நிராகரிப்பாளர்களின் உள்ளங்களில் என்ன உணர்வுகள் உருவாகியிருக்குமோ அவற்றை சொற்களில் எடுத்துரைக்க முடியாது!

சுருக்கமாக, அந்த நாளன்று மகாமே இப்ராஹீம் என்ற இடம் ஏக இறை வணக்கத்திற்காக சிறப்பானதாக ஆக்கப்பட்டது. மேலும் சிலை நிரந்தரமாக உடைக்கப்பட்டு விட்டது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹுபுல் என்ற பெயர் கொண்ட சிலையின் மீது தமது தடியால் அடித்தார்கள். மேலும், அது தனது இடத்தில் விழுந்து உடைந்து விட்டது. அப்போது ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் அபூ ஸுஃப்யானை நோக்கி புன்சிரித்தவாறு பார்த்தார்கள். மேலும், அபூ ஸுஃப்யானே! உமக்கு நினைவு இருக்கிறதா? அப்போது முஸ்லிம்கள் காயங்களால் அவதியுற்று ஒரு பக்கமாக நின்று கொண்டிருந்தார்கள். அப்போது, நீர் உமது ஆணவத்தால் اُعْلُ هُبَلْ- اُعْلُ هُبَلْ- என்று அறிவிப்பு செய்தீர்.

பொருள்: ஹுபுல் மகிமை ஓங்குக; ஹுபுல் மகிமை ஓங்குக; மேலும், ஹுபுல் சிலைதான் எங்களுக்கு உஹது நாளன்று முஸ்லிம்கள் மீது வெற்றியை பெற்று தந்தது என்று நீர் கூறினீர். இன்று நீர் காண்கின்றீர்! அந்த ஹுபுல் சிலை துண்டு துண்டாக உடைந்து கிடக்கின்றது. அபூ ஸுஃப்யான் கூறினார்: ஸுபைரே! இந்த விஷயங்களை விட்டு விடும்; இறைத் தூதர் (ஸல்) அவர்களின் இறைவனைத் தவிர வேறு ஏதாவது தெய்வம் இருந்திருந்தால் பின்னர் இன்று நாங்கள் என்னவெல்லாம் காண்கிறோமோ அவ்வாறு ஒருபோதும் நிகழ்ந்திருக்காது என்பது எங்களுக்கு இன்று நன்றாக தென்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அடுத்து, கஅபத்துல்லாஹ்விற்குள் உருவாக்கப்பட்டிருந்த ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) போன்றோரின் சித்திரங்களை அழிப்பதற்கு அன்னார் (ஸல்) கட்டளை பிறப்பித்தார்கள். மேலும், கஅபத்துல்லாஹ்வில் அல்லாஹ்வின் வாக்குறுதி நிறைவேறியதற்காக நன்றி தெரிவிக்கும் விதமாக இரண்டு ரக்அத் தொழுதார்கள். பின்னர் வெளியில் வருகை தந்தார்கள். மேலும் வெளியில் வந்தும் கூட இரண்டு ரக்அத்துகள் தொழுதார்கள். கஅபத்துல்லாஹ்வில் இருந்த சித்திரங்களை அழிப்பதற்காக இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை நியமித்திருந்தார்கள். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை நாமும் தான் நபி என்று ஒப்புக் கொண்டிருக்கின்றோம் என்ற எண்ணத்தினால் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் சித்திரத்தை அன்னார் (ரலி) அழிக்கவில்லை. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அந்த சித்திரம் எஞ்சியிருப்பதை கண்டபோதோ, உமரே! நீங்கள் இது என்ன செய்துள்ளீர்கள்? மேலும்,இறைவன்

مَا كَانَ إِبْرَاهِيْمُ يَهُوْدِيًّا وَّلَا نَصْرَانِيًّا
وَلٰكِنْ كَانَ حَنِيْفًا مُّسْلِمًا وَّمَا كَانَ مِنَ الْمُشْرِكِيْنَ

என்று கூறவில்லையா? என்று கூறினார்கள். (ஆலி இம்ரான்: 68)

பொருள்: இப்ராஹீம் யூதராகவோ, கிறிஸ்தவராகவோ இருக்கவில்லை. மாறாக, அவர் ஏக இறைவனை வணங்குபவராகவும்,(அவனுக்கே) முற்றிலும் கட்டுப்பட்டவராகவும் இருந்தார். அவர் இணை வைப்பவர்களைச் சார்ந்தவராக இருக்கவில்லை. அவர் இறைவனின் அனைத்து உண்மைத்துவங்களையும் ஒப்புக் கொள்ளக் கூடியவராகவும் இறைவனின் ஏகத்துவ அடியாராகவும் இருந்தார். எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கட்டளையினால் இந்த சித்திரமும் அழிக்கப்பட்டு விட்டது.

இறைவனின் அடையாளங்களைக் கண்டு முஸ்லிம்களின் உள்ளம் அந்த நாளில் ஈமானால் எந்த அளவிற்கு நிறைந்து கொண்டிருந்தது என்றால், மேலும் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேன்மையின் மீது அவர்களின் நம்பிக்கை எந்த அளவிற்கு அதிகரித்துக் கொண்டிருந்தது என்றால், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஸம்ஸம் நீரூற்றிலிருந்து தண்ணீர் அருந்துவதற்கு தண்ணீர் கொண்டு வரும்படி கூறினார்கள். (ஸம் ஸம் நீரூற்றை ஹஸ்ரத் இஸ்மாயீல் பின் இப்ராஹீம் அவர்களுக்காக இறைவன் ஓர் அடையாளமாக பீறிடச் செய்திருந்தான்) அதிலிருந்து சிறிது தண்ணீர் அருந்திவிட்டு எஞ்சிய தண்ணீரைக் கொண்டு அன்னார் (ஸல்) உளு செய்தார்கள். அப்போது அன்னாரின் உடலிலிருந்து எந்தத் துளியும் நிலத்தில் விழவில்லை. முஸ்லிம்கள் உடனடியாக அதனை ஏந்திக் கொண்டார்கள். மேலும் அருளுக்குரிய அதனை தமது உடலில் தடவிக் கொண்டார்கள். மேலும், நாங்கள் இது போன்று ஓர் அரசருடன் அவரது மக்கள் இந்த அளவிற்கு அன்பு செலுத்தக் கூடிய வேறு எந்த அரசரையும் நாம் கண்டதில்லை. (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் குர்ஆன், தொகுதி 20, பக்கம் 345,347)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த விஷயத்தை உள்ளத்தில் நன்றாக நினைவிற் கொள்ளுங்கள். அதாவது எவ்வாறு பைத்துல்லாஹ்வில் ஹஜ்ரே அஸ்வத் இருக்கின்றதோ அதே போன்று இதயம் நெஞ்சில் இருக்கின்றது.

உதாரணம் கொடுக்கின்றார்கள்: அன்னார் (அலை) ஹஜ்ரே அஸ்வதை நமது நெஞ்சில் இருக்கின்ற மனித இதயத்துடன் உதாரணம் கொடுக்கின்றார்கள்.

கூறினார்கள்: பைத்துல்லாஹ்விலும் நிராகரிப்பாளர்கள் சிலை வைத்துவிட்டிருந்த ஒரு காலம் அங்கு வந்திருந்தது. பைத்துல்லாஹ்வில் இந்த காலம் வராமல் இருப்பதற்கும் சாத்தியம் இருந்தது. ஆனால், அவ்வாறு நிகழவில்லை. அல்லாஹ் அதனை ஓர் உதாரணமாக வைத்திருக்கின்றான். மனித இதயமும் ஹஜ்ரே அஸ்வதைப் போன்றதாகும். மேலும் அதன் நெஞ்சகம் பைத்துல்லாஹ்வுடம் ஒப்புமை பெற்றிருக்கின்றது. அல்லாஹ்வைத் தவிர மற்ற எண்ணங்கள் அந்த கஅபாவில் வைக்கப்பட்டிருந்த அந்த சிலைகளைப் போன்றதாகும்.

அதாவது உள்ளத்தில் அல்லாஹ்வைத் தவிர வருகின்ற அந்த எண்ணங்கள் அனைத்தும் சிலைகள் ஆகும். புனித மக்காவில் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்தாயிரம் பரிசுத்தவான்களின் ஜமாஅத்துடன் சென்றடைந்தபோதும், மக்கா வெற்றி கொள்ளப்பட்ட போதும் அங்கு இருந்த சிலைகள் முற்றிலும் அகற்றப்பட்டன.அந்த பத்தாயிரம் ஸஹாபிகளை முந்தைய வேதங்களில் வானவர்கள் என்று எழுதப்பட்டுள்ளது. உண்மையில் அவர்களின் மேன்மை வானவர்களைப் போன்றதாக இருந்தது. மனித ஆற்றலும் ஒருவகையில் வானவர்களுடைய அந்தஸ்தையே பெற்றிருக்கின்றது. ஏனெனில்,

يَفْعَلُوْنَ مَا يُؤْمَرُوْنَ

என்பது வானவர்களின் மேன்மையாக இருப்பதைப் போன்று மனித ஆற்றலின் சிறப்பு இதுவாகும். அதாவது அவர்களுக்கு என்ன கட்டளை வழங்கப்படுமோ அதனை செயல்படுத்துகின்றனர். அதேபோன்று அனைத்து ஆற்றல்களும், திறமைகளும் மனித கட்டளைகளுக்கு கீழ் இருக்கின்றன. எனவே பொய் தெய்வங்களான அந்த சிலைகளை தோல்வியுறச் செய்வதற்கும், வேரோடு அழிப்பதற்கும் இதே போன்று அவற்றின் மீது தாக்குதல் நடத்துவது அவசியமாகும். இதற்கானப் படையானது உள்ளத்தை தூய்மைப்படுத்துவதன் மூலம் தயாராகின்றது. மேலும் எவர் உள்ளத்தை தூய்மைப்படுத்துகின்றாரோ அவருக்கே வெற்றி வழங்கப்படுகின்றது.

ஆக, திருக்குர்ஆனில்

قَدْ اَفْلَحَ مَنْ زَكّٰىهَا

என்று அல்லாஹ் கூறியுள்ளான். (அஷ்ஷம்ஸ்: 10)

இதயம் சீர்படுத்தப்பட்டு விட்டால் பின்னர் முழு உடலும் சீர்பட்டு விடுகின்றது என்று ஹதீஸில் வந்துள்ளது. இது எவ்வளவு உண்மையான விஷயமாகும்! கண், காது, கை, கால், நாவு போன்ற உறுப்புகள் எந்த அளவில் இருக்கின்றனவோ அவை உள்ளபடியே இதயத்தின் கட்டளைப்படியே செயல்படுகின்றன. ஓர் எண்ணம் வருகின்றது; பின்னர் அது எந்த உறுப்புகள் தொடர்பாக இருக்குமோ அது அதனை செயல்படுத்துவதற்கு தயாராகி விடுகின்றது.(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 173, 2022-ம் ஆண்டு பதிப்பு)

அன்னார் (அலை) இதே போன்று இந்த உதாரணத்தையும் வழங்கியுள்ளார்கள். அதாவது, உங்களது உள்ளத்தின் சிலைகளையும் அகற்றிவிடுங்கள்; அப்போதுதான் நீங்கள்

உண்மையான நம்பிக்கையாளர்களாக ஆக முடியும். அன்னார் (ஸல்) அவர்கள் அங்கு சொற்பொழிவும் நிகழ்த்தினார்கள். ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றி கொள்ளப்பட்ட நாளன்று கூறினார்கள்:

இனி ஹிஜ்ரத் கிடையாது; ஆனால், ஜிஹாதும், எண்ணமும் எஞ்சியுள்ளது. மேலும், உங்களிடம் ஜிஹாதிற்காக புறப்படும்படி கூறப்பட்டால் நீங்கள் ஜிஹாதிற்காக புறப்பட்டு விடுங்கள்; மேலும், எந்த நாளன்று வானங்களையும், பூமியை படைத்தானோ அந்த நாளிலிருந்து இந்த மக்கா நகரத்தை அல்லாஹ் புனிதமாக்கி விட்டான். எனவே இது கியாமத் நாள் வரை அல்லாஹ்வால் புனிதமாக்கப்பட்டதை சார்ந்ததாகும். மேலும் எனக்கு முன்னர் வேறு எவருக்கும் இதில் போர் புரிவது ஆகுமானதாக இருக்கவில்லை. மேலும், எனக்கும் கூட பகலின் ஒரு குறிப்பட்ட நேரத்திற்காக மட்டுமே ஆகுமானதாக்கப்பட்டுள்ளது.

ஆக, இந்த நகரம் கியாமத் நாள் வரை அல்லாஹ்வால் புனிதமாக்கப்பட்ட இடமாக இருக்கின்றது. அதன் முட்கள் வெட்டப்படக் கூடாது. அங்கு வேட்டை விலங்குள் அச்சுறுத்தப்படக் கூடாது. அதாவது அது பயமுறுமத்தப்படக் கூடாது. அங்கு கீழே விழுந்து கிடக்கும் பொருளை எவரும் எடுக்கக் கூடாது. ஆயினும், எவை அடையாளம் காணப்படுமோ அவற்றைத் தவிர. மேலும் அதன் புல் வெட்டப்படக் கூடாது.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அத்கர் வகை புல்லை விதிவிலக்காக ஆக்கிவிடுங்கள் என்றார்கள். அத்கர் என்பதும் புல்லின் ஒரு வகையாகும். ஏனெனில், இவை அவற்றின் கலைஞர்களுக்கு பயன்படுகின்றது. மேலும், அவை அவர்களின் வீடுகளில் கிடைக்கின்றது. கூறினார்கள்: அத்காரைத் தவிர. ஆகட்டும்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். தமது நோக்கத்திற்காக இத்காரை வெட்டிக் கொள்ள முடியும்; (ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் ஜிஸ்யா, ஹதீஸ் எண்: 3189)

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ் தமது இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு மக்காவை வெற்றி கொள்ளச் செய்தபோது, அன்னார் (ஸல்) அவர்கள் மக்களுக்கு மத்தியில் எழுந்து நின்றார்கள். மேலும், அல்லாஹ்வின் புகழை எடுத்துரைத்தார்கள். பின்னர் கூறினார்கள்:

நிச்சயமாக அல்லாஹ் மக்காவை யானைப் படையினரிடம் இருந்து பாதுகாத்தான்; மேலும், அவன் தனது தூதர் மற்றும் நம்பிக்கையாளர்களுக்காக அதனை வெற்றி கொள்ளச் செய்துவிட்டான். எனக்கு முன்னர் வேறு எவருக்கும் இது ஆகுமானதாக இருக்கவில்லை. எனக்கும் கூட பகலின் ஒரு நேரம் மட்டுமே ஆகுமானதாக ஆக்கப்பட்டுள்ளது. எனக்குப் பிறகு வேறு எவருக்கும் ஆகுமானதாக இருக்காது. அதாவது மக்கா வெற்றியின் போது ஒரு நாள் போரிட அனுமதிக்கப்பட்டது என்றால் அது எனக்காக சிறிது நேரத்திற்காக ஆகுமானதாக ஆக்கப்பட்டது. இதன் பிறகு இனி எவருக்கும் ஆகுமானது கிடையாது. அங்கு வேட்டை விலங்குகள் விரட்டப்பட கூடாது. அதன் முட்களும் வெட்டப்படக் கூடாது. மேலும், அங்கு கீழே விழுந்து கிடக்கும் பொருட்கள் ஆகுமானதாக இருக்காது. அறிவிப்பு செய்யக் கூடியவர்களைத் தவிர.எவர் கொலை செய்யப்படுவாரோ அவர் தொடர்பாக இரு அதிகாரங்கள் இருக்கின்றன. ஒன்று ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டும் அல்லது பழிவாங்கப்பட வேண்டும்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் இத்காரைத் தவிர என்று கூறினார்கள். ஏனெனில், அதனை நாங்கள் எங்களது கப்ர்களிலும், எங்களது வீடுகளிலும் பயன்படுத்துகின்றோம். எனவே இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஆகட்டும்; அத்கர் எனும் வகை புல்லைத் தவிர. அதனை வெட்டிக் கொள்ளலாம். அபூ ஷாஃ ஏமன் வாசிகளைச் சேர்ந்த ஒரு நபராக இருந்தார்கள். அவர் நின்று கொண்டிருந்தார். அவர் கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்காக எழுதி விடுங்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அபூ ஷாஃவிற்காக எழுதி விடுங்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்கள்: நான் அவ்ஸாஈயிடம் கேட்டேன். எனக்காக எழுதுவிடுங்கள் என்று கூறும் இவரது கூற்றின் பொருள் என்ன? அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு எழுதிவிடுங்கள். இதன் பொருள் என்னவாக இருந்தது? அன்னார் கூறினார்கள்: இதன் பொருள் இவ்வாறாக இருந்தது. அதாவது இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எந்த விஷயங்களை கூறியுள்ளார்களோ எதனை அவர் தற்போது கேட்டாரோ அதனை அவருக்கு எழுதி கொடுங்கள் என்பதாக இருந்தது. ஆக, அன்னார் (ஸல்) அதனை எழுதி கொடுத்து விட்டார்கள். 9ஸஹீஹ் புஹாரீ, ஹதீஸ் எண்: 2434)

ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம் என்ற நூலில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அதாவது இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கஅபாவின் வாசல்களில் நின்று கொண்டு கூறினார்கள்: அல்லாஹ்வைத் தவிர எவரும் இறை வணக்கத்திற்கு தகுதிவாய்ந்தவர் இல்லை. அவன் ஏகன் ஆவான்; அவனுக்கு எந்த இணையும் இல்லை. அவன் தனது வாக்குறுதியை உண்மைப்படுத்திக் காட்டியுள்ளான். மேலும் தனியாக அனைத்து கூட்டத்தினரையும் தோல்வியுறச் செய்து விட்டான். மக்களே! அனைத்து பெருமையும், அனைத்து பழிவாங்குதலும், அனைத்து இரத்த இழப்பீடும் எனது இந்த இரண்டு கால்களுக்கு கீழே இருக்கின்றன. ஆனால், கஅபத்துல்லாஹ்வின் திறவுகோலை நிர்வகிக்கும் பொறுப்பு மற்றும் ஸம் ஸம்-லிருந்து தண்ணீர் கொடுக்கும் தொண்டு எவரிடம் முன்னரே இருக்கின்றதோ அவருக்கே இந்த தொண்டு கிடைக்கும். மக்களே! எந்த நபர் தவறுதலாக கொல்லப்படுவாரோ, அதாவது மரக்கட்டை அல்லது சாட்டை போன்றவற்றால். அவற்றில் இரத்த இழப்பீட்டுத் தொகை அதாவது இரத்த இழப்பீடு ஏழு ஒட்டகம் ஆகும். குறைஷியர்களே! அறிவீனமான காலத்தில் மூதாதையர்களுக்கு செலுத்தப்பட்டு வந்த பெருமை மற்றும் பெருமிதங்களை இறைவன் உங்களிடமிருந்து விலக்கி விட்டான்; இனி இந்த பெருமை எதுவும் கிடையாது. அனைத்து மக்களும் ஆதமின் சந்ததிகள் ஆவர். மேலும் ஆதமின் படைப்பு மண்ணிலிருந்து நிகழ்ந்துள்ளது. பின்னர் அன்னார் (ஸல்) இந்த வசனத்தை ஓதினார்கள்: يَاأَيُّهَا النَّاسُ إِنَّا خَلَقْنَاكُمْ مِنْ ذَكَرٍ وَأُنْثَى

وَجَعَلْنَاكُمْ شُعُوبًا وَقَبَائِلَ

لِتَعَارَفُوا إِنَّ أَكْرَمَكُمْ عِنْدَ اللَّهِ أَتْقَاكُمْ

(அல்ஹுஜராத்: 14)

மக்களே! நிச்சயமாக, நாம் உங்களை ஆண், பெண்ணிலிருந்து படைத்தோம்; மேலும்,நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக, நாம் உங்களைக் கோத்திரங்களாகவும், இனங்களாகவும் ஆக்கியுள்ளோம். நிச்சயமாக அல்லாஹ்வின் பார்வையில் உங்களில் எல்லாரையும் விட அதிக கண்ணியமிக்கவர், உங்களுள் இறையச்சம் மிக்கவரே.

அடுத்து அன்னார் (ஸல்) கூறினார்கள்: குஷையர்களே! நான் உங்களுடன் எவ்வாறு நடப்பேன் என்று நீங்கள் எண்ணுகின்றீர்கள்? அதற்கு, நீங்கள் என்ன செய்தாலும் சிறந்ததை செய்வீர்கள்; தாங்கள் கண்ணியத்திற்குரிய சகோதரரும், கண்ணியத்திற்குரிய சகோதரரின் மகனும் ஆவீர்கள் என்று முஸ்லிம்களாக ஆகாத குறைஷியர்கள் கூறினர். அன்னார் (ஸல்) கூறினார்கள்: நல்லது! அப்படியென்றால் செல்லுங்கள்; நீங்கள் அனைவரும் சுதந்திரம் பெற்றவர் ஆவீர்கள். (ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம், பக்கம் 744, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஓர் அறிவிப்பில் உள்ளது: அன்னார் (ஸல்) கூறினார்கள்:

أَقُولُ كَمَا قَالَ يُوسُفُ: لَا تَثْرِيبَ عَلَيْكُمُ

الْيَوْمَ يَغْفِرُ اللَّهُ لَكُمْ وَهُوَ أَرْحَمُ الرَّاحِمِينَ

(அஸ்ஸுனனுல் குப்ரா, தொகுதி 9, பக்கம் 200, ஹதீஸ் 18275, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 2003)

பொருள்: இன்றைய நாள் உங்கள் மீது எவ்விதக் குற்றச்சாட்டும் இல்லை என்று யூஸுஃப் கூறியதையே நானும் கூறுவேன். அல்லாஹ் உங்களை மன்னித்து விடுவான். மேலும் அவன் கருணை காட்டக் கூடிய அனைவரையும் விட அதிக கருணை காட்டக் கூடியவன் ஆவான்.

மக்கள் பொது மன்னிப்பிற்கான அறிவிப்பை கேட்டு விட்டு, தற்போது தான் கப்ர்களிலிருந்து வெளிவந்தது போன்று வெளியேறினர். மேலும் இஸ்லாத்தில் இணைந்து விட்டனர். இந்த விஷயத்தைக் கேட்டு விட்டு அவர்கள் உடனடியாக இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளத் துவங்கி விட்டனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) மக்காவை மக்காவாசிகளை மன்னித்தது தொடர்பான சம்பவங்களை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: அன்னார் (ஸல்) இந்த விஷயங்களை முடித்து விட்டபோது, மேலும் மக்காவாசிகள் அன்னாரின் சமூகத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

மக்காவின் மக்களே! இறைவனின் அடையாளங்கள் எவ்வாறு சொல்லுக்கு சொல் நிறைவேறி விட்டது என்பதை நீங்கள் பார்த்து விட்டீர்கள்; தற்போது கூறுங்கள்; உங்களுடைய அந்த அநீதிகள் மற்றும் அந்த குற்றங்களுக்கு நான் எப்படி பழிவாங்க வேண்டும்? நீங்கள் அந்த அநீதிகளையும், குற்றங்களையும் ஏக இறைவனை வணங்கக் கூடிய ஏழை அடியார்கள் மீது இழைத்துள்ளீர்கள். மக்காவாசிகள் கூறினர்: யூஸுஃப் தமது சகோதரர்களுடன் நடந்து

திருக்குர்ஆனிலிருந்து...

**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

கொண்ட அதே நடைமுறையையே நாங்கள் தங்களிடம் எதிர்பார்க்கின்றோம். இது இறைவனின் வல்லமையாக இருந்தது. அதாவது மக்காவாசிகளின் நாவிலிருந்து எதனைப் பற்றிய முன்னறிவிப்பை இறைவன் சூரா யூஸுஃபில் ஏற்கனவே செய்து வைத்திருந்தானோ அதே சொற்கள் வெளிப்பட்டன. யூஸுஃப் தமது சகோதரர்களுடன் எவ்வாறு நடந்து கொண்டாரோ அவ்வாறே நீர் மக்காவாசிகளுடன் நடந்து கொள்வீர் என்று மக்கா வெற்றி கொள்ளப்படுவதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன்னரே அல்லாஹ் கூறியிருந்தான். எனவே மக்காவாசிகளின் வாயிலிருந்து, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் யூஸுஃபுடன் ஒப்புமை கொண்டவர் ஆவார்கள் என்றும், யூஸுஃப் (அலை) அவர்களைப் போன்று அல்லாஹ் அன்னாருக்கு தமது சகோதரர்கள் மீது வெற்றியை வழங்கினான் என்றும் மக்காவாசிகளின் வாயினாலேயே இந்த விஷயத்தை உண்மைப்படுத்தி விட்டான். அப்போது அன்னார் (ஸல்) இவ்வாறு அறிவிப்பு செய்து விட்டார்கள்:

لَا تَثْرِيْبَ عَلَيْكُمُ الْيَوْمَ

பொருள்: **இறைவனின் மீது ஆணையாக! இன்று உங்களுக்கு எவ்விதமான தண்டனையும் வழங்கப்பட மாட்டாது; மேலும், உங்கள் மீது எவ்வித குற்றமும் சுமத்தப்படாது.**

(தீப்பாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 347 - 348)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொண்டு விட்ட பிறகோ அனைத்து நிராகரிப்பாளர்களும் கைது செய்யப்பட்டு அன்னாரின் முன்னால் நிறுத்தப்பட்டார்கள். அப்போது, நிராகரிப்பாளர்கள் சுயமே தங்களது நாவுகளால் நாங்கள் எங்களுடைய கடும் குற்றங்களின் காரணமாக கொலை செய்யப்படுவதற்கு தகுதியுடையவர்கள் ஆவோம்; மேலும், எங்களை தங்களின் கருணையின் கீழ் ஒப்படைக்கின்றோம்; என்று கூறியபோது, அன்னார் (ஸல்) அனைவரையும் மன்னித்து விட்டார்கள்; மேலும், அந்த சந்தர்ப்பத்தின்போது, மன்னிப்பதற்கு இஸ்லாத்தை தழுவ வேண்டும் என்ற நிபந்தனையை கூட விதிக்கவில்லை. ஆனால், அந்த மக்கள் கண்ணியமிகு இந்த நல்லொழுக்கத்தைக் கண்டு தாங்களாகவே முஸ்லிம்களாகி விட்டனர். (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம் 235)

அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

**அக்காலத்தின் நிலைமையினை** சீர்தூக்கிப் பார்க்கும்போது இறைத் தூதர் (ஸல்) அவர்களின் நல்லொழுக்க ஆற்றலின் சிறப்பை எண்ணிப் பார்க்க முடியும். எதிரிகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கும், அன்னாரின் ஸஹாபிகளுக்கும் எந்த அளவுக்கு துன்பங்கள் இழைத்தனர்; மேலும், அதற்கு எதிரில் அன்னாருக்கு முழுமையான ஆட்சியும், அதிகாரமும கிடைத்து விட்ட அதுபோன்ற நிலையில் அந்த மக்களுடன் எப்படி நடந்து கொண்டார்களோ அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மையையும், உயர்வையும் வெளிப்படுத்துகின்றது. அபூ ஜஹல் மற்றும் அவனது மற்ற கூட்டாளிகளும் அன்னாருக்கும், அன்னாரின் உயிரை அர்ப்பணம் செய்வதற்கு தயாராக இருந்த தொண்டர்களுக்கும் வழங்கிடாத எந்த துன்பம் தான் இருந்தது? ஏழை முஸ்லிம் பெண்களை ஒட்டகங்களால் கட்டி எதிர் திசையில் ஓடச் செய்தனர். மேலும், அவர்கள் பிளக்கப்பட்டார்கள். அவர்கள் இரண்டு துண்டுகளாக ஆகினர். لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்பதை ஏன் ஏற்றுக் கொண்டார்கள் என்ற குற்றத்தினால் மட்டுமே அவ்வாறு அவர்களுடன் நடந்து கொள்ளப்பட்டது. ஆனால், அன்னார் (ஸல்) அதற்கு எதிரில் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையுடன் செயல்பட்டார்கள். மேலும், மக்கா வெற்றி கொள்ளப்பட்டபோது,

لَا تَثْرِيْبَ عَلَيْكُمُ الْيَوْمَ

(யூஸுஃப்: 93) என்று கூறி மன்னித்து விட்டார்கள். இது எத்தனை மகத்தான நல்லொழுக்க மேன்மையாகும். இது வேறு எந்த நபியிடமும் காணப்படவில்லை!

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 485, 2022-ம் ஆண்டு பதிப்பு)

அடுத்து, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: மக்காவில் எந்த மக்கள் துன்பமிழைத்திருந்தார்களோ, அன்னார் (ஸல்) மக்காவை வெற்றி கொண்டபோது, அன்னார் (ஸல்) விரும்பியிருந்தால் அனைவரையும் கொலை செய்திருக்கலாம். ஆனால், **அன்னார் (ஸல்) கருணை காட்டினார்கள்!** மேலும்,

لَا تَثْرِيْبَ عَلَيْكُمُ الْيَوْمَ

(யூஸுஃப்: 93) என்று கூறிவிட்டார்கள்.

அன்னார் மன்னித்து விட்டதன் காரணத்தினால் அனைவரும் முஸ்லிம்களாகிவிட்டனர். தற்போது இந்தவிதமான மகத்தான நல்லொழுக்க மேன்மை வேறு ஏதாவது நபியிடம் காணப்படுகின்றதா என்ன? ஒருபோதும் இல்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இருப்பின் மீது குறிப்பாகவும், அன்னாரின் அன்பர்கள் மற்றும் ஸஹாபிகளுக்கும் அந்த மக்கள் துன்பங்கள் இழைத்திருந்தனர். மன்னிக்கமுடியாத தொல்லைகளை வழங்கியிருந்தனர். அன்னார் (ஸல்) தண்டனை கொடுப்பதற்கான ஆற்றலும், அதிகாரமும் பெற்றிருந்தும் உடனடியாக அவர்களை மன்னித்து விட்டார்கள். ஆனால், ஒருவேளை அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டிருந்தால் அது உள்ளபடியே முற்றிலும் நீதி மற்றும் நேர்மையான செயலாக இருந்திருக்கும். ஆயினும், அன்னார் (ஸல்) அந்த நேரத்தில் தமது மன்னிப்பு மற்றும் கருணைக்கான முன்மாதிரியை காட்டினார்கள். இது எப்படிப்பட்ட விவகாரமாக இருந்தது என்றால், அது அற்புதங்களை போன்று ஸஹாபிகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியதாக இருந்தது. எனவே அன்னார் (ஸல்) பெயர் சூட்டப்பட்டதற்கு ஏற்ப முஹம்மது (ஸல்) ஆகிவிட்டார்கள். மேலும், பூமியில் அன்னார் புகழப்பட்டார்கள்; மேலும் அதேபோன்று விண்ணிலும் அன்னார் புகழப்பட்டார்கள். மேலும், விண்ணிலும் அன்னார் (ஸல்) "முஹம்மது" ஆக இருந்தார்கள். அன்னாரின் இந்த பெயரை அல்லாஹ் முன்மாதிரியாக உலகிற்கு வழங்கியுள்ளான். இதுபோன்ற நல்லொழுக்கங்களை மனிதன் தன்னிடம் உருவாக்கிக் கொள்ளாத வரை அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இதுபோன்ற நல்லொழுக்கங்களை மனிதன் தன்னிடம் உருவாக்கிக் கொள்ளாத வரை எந்த பயனும் ஏற்படாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கம் மற்றும் செயல்முறையை தமது வழிகாட்டியாக ஆக்கிக்கொள்ளாத வரை அல்லாஹ்வின் நேசத்தை முழுமையான ரீதியில் மனிதன் தன்னுள் உருவாக்க முடியாது. (மல்ஃபூஸாத், தொகுதி2, பக்கம் 425-426)

"اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ"

தற்போது இரண்டு மர்ஹூம்களின் நற்குறிப்பையும் நான் எடுத்துரைக்க விரும்புகின்றேன். பிறகு நான் அவர்களின் ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன்.

மர்ஹூம் ஸய்யத் மவ்லூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் துணைவியார் ஸய்யதா லுப்னா அஹ்மத் ஸாஹிபா அவர்களுடையது முதலாவதாகும். கடந்த நாட்களில் 71வது வயதில் அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது. اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْن அல்லாஹ்வின் அருளினால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். தலைமையக ரீதியில் இல்லை ; எனினும், தமது முஹல்லா மற்றும் ஹல்கா அளவில் அன்னாருக்கு லஜ்னா அமைப்பில் தொண்டாற்ற சந்தர்ப்பம் கிடைத்துக் கொண்டிருந்தது. அன்னாரின் திருமணம் ஸாஹிப்ஸாதி அமத்துல் ஹக்கீம் ஸாஹிபா மற்றும் ஸய்யது தாவூத் முஸஃபர் ஷாஹ் ஸாஹிப் ஆகியோரின் மகனான ஸய்யது மவ்லூத் அஹ்மத் ஸாஹிபுடன் நிகழ்ந்தது. அன்னாரின் நிக்காஹ்வை ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) நடத்தி வைத்தார்கள். அதில் சில அறிவுரைகளும் இருக்கின்ற காரணத்தினால் அந்த நிக்காஹ்வின் சில சொற்களை படித்து விடுகிறேன். இது இன்றைய நாட்களில் நடைபெறும் திருமண பந்தங்களிலும் பயனளிக்கக் கூடியவையாகும்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இவ்வாறு கூறியிருந்தார்கள்:

**திருமண பந்தம் என்பது மரத்தின் இணைப்பைப் போன்றதாகும்.** அவற்றை துவக்கத்தில் மிகவும் பாதுகாத்து வைக்க நேரிடுகின்றது. திருக்குர்ஆனின் வழிகாட்டலுக்கு ஏற்ப இந்த இணைப்பை நேர்மையான கூற்று என்ற நூலினால் கட்டி வைக்க நேரிடுகின்றது. அப்போதுதான் அது பாதுகாக்கப்படுகின்றது. மேலும், அதற்கான பொறுப்பு கணவன், மனைவி இருவருக்கும் மட்டுமே இருப்பதில்லை. மாறாக, அவர்களின் குடும்பத்தினர்கள் மீதும், அவர்களின் சூழல்களின் மீதும்,இன்னும் கூறப்போனால், அவர்களின் நண்பர்களின் மீதும் இருக்கின்றது. ஏனெனில் ஏராளமான சீர்கேடுகள் தப்பெண்ணத்தின் விளைவாக அல்லது புரளிகளின் விளைவாக அல்லது பொறுமையின்மையின் காரணமாக அல்லது ஆக்ரோஷத்தின் விளைவாக உருவாகி விடுகின்றன. மேலும், அவற்றை தடுப்பதற்காக நேர்மையான கூற்று மிகவும்

*நபிமொழியிலிருந்து...*

**சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)**

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

ஒரு வலிமையான நூல் ஆகும்.

அடுத்து அன்னார் (ரலி) கூறியிருந்தார்கள்:

எந்த நிக்காஹ்வை நான் தற்போது அறிவிப்பு செய்து கொண்டிருக்கின்றேனோ அதனை இரண்டு குடும்பத்தாருக்கும் மிகவும் அருளுக்குரியதாக இறைவன் ஆக்குவானாக! ஜமாஅத்திற்கும் அருளுக்குரியதாக இருக்கட்டுமாக! மேலும் மனித குலத்திற்கும் அருளுக்குரியதாக இருக்கட்டுமாக! மார்க்கத்திற்கு தொண்டாற்றக் கூடிய சந்ததியினர் இதன் மூலம் வெளிப்படட்டுமாக!

மேலும், கூற முடியும்; இன்னும் கூறப்போனால், நான் கூறமுடியும்; ஏனெனில் உறவும் இருந்தது. அதாவது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் இந்த சொற்களுக்கு ஏற்ப மதிப்பிற்குரிய லுப்னா ஸாஹிபா தமது உறவினர்களுக்குரிய உரிமைகளை செலுத்தினார்கள்; மேலும் அதனை பேணுவதற்கும் முயற்சி செய்தார்கள்.

அடுத்து, அன்னார் (ரஹி) இவ்வாறு கூறினார்கள்:

இன்று நான் எந்த நிக்காஹ்வை அறிவித்துக் கொண்டிருக்கின்றேனோ, அது எனது இளைய சகோதரி அமத்துல் ஹக்கீம் ஸாஹிபா மற்றும் ஸய்யது தாவூத் முஸஃபர் ஷாஹ் ஸாஹிபின் மகன் ஸய்யது மவ்லூத் அஹ்மது ஸாஹிப் ஆகியோருடையதாகும். மேலும், மணமகளானவர் டாக்டர் ஸய்யது குலாம் முஜ்தபா ஸாஹிபின் மகள் ஆவார்கள்.

அடுத்து, டாக்டர் ஸாஹிப் வாழ்க்கையை அர்ப்பணித்த மருத்துவராக இருப்பதானால் ஆஃப்ரிக்காவில் தங்கியிருந்தார்கள். துவக்கத்தில் நுஸ்ரத் ஜஹான் திட்டம் அறிவிக்கப்பட்டபோது, வாழ்வை அர்ப்பணித்திருந்த துவக்கால மருத்துவர்களில் ஒருவராக இருந்தார்கள். அன்னாரைக் குறித்து ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் குறிப்பிட்டார்கள்: டாக்டர் ஸாஹிப் மேற்கு ஆஃப்ரிக்காவில் வாழ்வை அர்ப்பணித்த டாக்டராக பணிபுரிந்த துவக்க கால மருத்துவர்களில் ஒருவராக இருந்தார்கள். அல்லாஹ் அன்னாரின் துஆக்களை செவியுற்றான். அன்னாரின் கையில் ஏராளமான குணத்தை வைத்திருந்தான். மேலும் "மிகவும் வெற்றி பெற்ற அறுவை சிகிச்சை நிபுணர்" என்ற ரீதியில் அன்னார் கானாவில் பணி செய்து வந்தார்கள். பின்னர் அதன் பிறகு நைஜீரியாவிலும் பணி செயதார்கள். (குத்பாத்தே நாஸிர், தொகுதி 10, பக்கம் 771 - 772, குத்பா நிக்காஹ், நவம்பர் 25, 1977)

ஸய்யதா லுப்னா ஸாஹிபாவின் புதல்வர் மஸூத் அஹ்மத் வாழ்வை அர்ப்பணித்தவர் ஆவார்கள். மேலும் இன்றைய நாட்களில் ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் டெப்டி அட்மினிஸ்ட்டேராக இருக்கின்றார்கள். அன்னார் தமது தாயாரின் நிலைமைகளை குறித்து கூறுகின்றார்கள்:

எனது தாய் வழிப்பாட்டனார் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் கானா சென்றார்கள். அப்போது முழு குடும்பமும் சென்றிருந்தது.

அன்னாரின் தாயார் லுப்னா ஸாஹிபாவும் உடன் இருந்தார்கள். அப்போது அவர்கள் சிறிய வயதுடையவராக இருந்தார்கள். இது லுப்னா ஸாஹிபாவின் திருமணத்திற்கு முன்பு நிகழ்ந்த சம்பவம் ஆகும். கூறுகின்றார்கள்:

அந்த காலத்தில் - அங்கு எந்த பொருட்களும் இல்லாததால் அப்போது சில முறை காயங்களுக்கு போடப்படும் கட்டுகளுக்கான துணிகளை வெட்டி வெட்டி கொடுத்து வந்தார்கள். வெளிச்சம் இல்லாமல் இருந்தது. டார்ச்சின் வெளிச்சத்தில் டாக்டர் ஸாஹிப் அறுவை சிகிச்சை செய்து வந்தார்கள். இந்த சிறுமியும் டார்ச்சை எடுத்துக் கொண்டு அங்கு நின்று கொண்டிருந்தார்கள். ஏனெனில், டாக்டர் ஸாஹிப் அந்த வெளிச்சத்தில் ஆப்ரேஷன் செய்வதற்காக அவ்வாறு செய்தார்கள்.

அடுத்து அவர்கள் எழுதுகின்றார்கள்: மர்ஹூமா மிகவும் அன்பு செலுத்தக் கூடியவராக இருந்தார்கள். தமது வேதனையை மறந்து மற்றவர்களுக்கு தொண்டு செய்து வந்தார்கள். தமது கணவர், பெற்றோர்கள், மாமியார், மாமனார் அனைவரின் உரிமைகளையும் சிறந்த முறையில் செலுத்தி வந்தார்கள்; மேலும் சரியாக நிறைவேற்றினார்கள். 1986-ம் ஆண்டில் மாடிப்படிகளிலிருந்து விழுந்து விட்டார்கள். இடுப்பில் வேதனை இருந்தது. பின்னர் அதன் பிறகு, கேன்ஸர் நோயும் ஏற்பட்டு விட்டது. சர்க்கரை நோயின் தொந்தரவும் இருந்தது. ஆனால், ஒருபோதும் வேதனையை வெளிப்படுத்தியது கிடையாது. மேலும் மிகவும் பொறுமையுடன் தமது நோயை கழித்து வந்தார்கள். ஆரோக்கியமாக இருக்கும்போது நடந்து சென்றதைப் போன்றே நடந்து சென்று வந்தார்கள். தமது பிள்ளைகளுக்கும், மகன் வழிப் பேரர்களுக்கும், மகள் வழிப் பேத்திகளுக்கும் துஆக்கள் கற்றுக் கொடுத்து வந்தார்கள்.

திலாவத் செய்ய முடியாமல் போகும்போது, பின்னர் திருக்குர்ஆனின் ஆன்லைன் திலாவத்தை கேட்டு வந்தார்கள். கூட்டங்களில் தொடர்ச்சியாக சென்று வந்தார்கள். தாங்கள் நோயுற்று இருக்கின்றீர்கள்; கூட்டத்திற்கு ஏன் செல்கின்றீர்கள்? என்று ஒருவர் அன்னாரிடம் கேட்டார். அப்போது, கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது நான் செல்லாமல் இருப்பதா? ஜமாஅத் அமைப்பு உள்ளது; அதனை நான் பேணி நடக்க வேண்டும் என்று அன்னார் கூறினார்கள். ஜமாஅத்திற்கு கட்டுப்படுதலுக்கான உணர்வு அதிகம் இருந்தது.

ஏனெனில், இவர்கள் எனது துணைவியாரின் அண்ணன் மனைவியாகவும் இருந்தார்கள். இதன் அடிப்படையில் நானும் கண்டுள்ளேன். எளிய இயல்பு படைத்தவராகவும், எல்லா வகையான நிலைமைகளிலும் வாழக் கூடியவராகவும் தம்மைத் தாமே அட்ஜெஸ்ட் செய்து கொள்ளக் கூடியவராகவும் அன்னார் இருந்தார்கள். மாமனார் வீட்டு தொடர்பையும் அன்னார் சிறப்பாக பேணினார்கள். நன்றாக பேணினார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக!

அன்னாரின் ஒரு மகளும், ஒரு மகனும் இருக்கின்றனர்.நான் கூறியது போன்று மகன் வாழ்வை அர்ப்பணித்தவர் ஆவார். அல்லாஹ் இந்த மக்களுக்கும் தமது தாய், தந்தையரின் நல்ல அடிச்சுவடுகளில் நடப்பதற்கான நற்பேறை வழங்குவானாக!

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய நாஸ்மூன் பீ.பீ ஸூபைர் ஸாஹிபா அவர்களுடையதாகும். இவர்கள் ஜெர்மனியைச் சேர்ந்த முஹம்மது ஷஃபீஃ ஸூபைர் ஸாஹிப் அவர்களின் துணைவியார் ஆவார்கள்.. கடந்த நாட்களில் அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

இவர்கள் மொரிஷீயஸ் நாட்டைச் சேர்ந்தவராக இருந்தார்கள். அன்னாரின் குடும்பத்தில் அன்னாரின் தந்தை வழிப்பாட்டனார் முஹம்மது ஹனீஃப் ஸூதன் ஸாஹிப் மூலம் அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் பின்விட்டுச் சென்றவர்களில் ஒரு மகனும், ஒரு மகளும் அடங்குவர். அன்னாரின் மகனான அத்ஹர் ஸூபைர் ஸாஹிப் ஜெர்மனியின் மனிதம் முதலில் அமைப்பின் சேர்மனாக இருக்கின்றார்கள். அத்ஹர் ஸூபைர் ஸாஹிப் எழுதுகின்றார்கள்:

அன்னார் தடுமாற்றம் அற்ற ஈமானும், ஆழமான பணிவின் முன்மாதிரியும் கொண்டிருந்தார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்:

அன்னார் என்னை எவ்வாறு வளர்த்தார்களோ மேலும் எனக்கு என்ன விஷயங்களை கற்றுக் கொடுத்தாரோ அதன் அடிப்படையில் நான் கூறுவேன். அன்னாரின் ஈமான் மிகவும் வலிமையுடையதாக இருந்தது. நான் இந்த விஷயத்தை மிகவும் உறுதியுடன் கூற முடியும். அதாவது, அன்னார் எந்த ஒரு விஷயத்தைக் குறித்தும் முறையீடு மற்றும் புகார் செய்ததாக நான் ஒருபோதும் செவியுற்றதில்லை. அன்னார் மிகவும் கடுமையாக நோயுற்றபோது, கூறுகின்றார்கள்: அந்த நேரத்தில் குறிப்பாக உடன் இருப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. மேலும், நினைவு திரும்பும்போதெல்லாம் தமது தொழுகைகளைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார்கள். தொழுகைகளை மிகவும் பேணி வந்தார்கள். எல்லையற்ற பொறுமை மற்றும் சகிப்புத்தன்மைக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். அல்லாஹ்வின் தீர்ப்புகளில் திருப்தி கொள்ளக் கூடியவராக இருந்தார்கள். அடுத்து கூறுகின்றார்கள்:

மக்களுக்கு மிகவும் உதவி செய்யக் கூடியவராக இருந்தார்கள். மேலும், இரகசியங்களை மிகவும் பேணி வந்தார்கள். ஒரு சம்பவம் இருக்கின்றது. அதாவது தம்பதிகளுக்கிடையிலான ஒரு விவகாரம் அன்னாரிடம் வந்தது. (அவரது) கணவரிடம் என்ன விஷயம்? என விசாரியுங்கள் என்று அன்னார் என்னிடம் கூறினார்கள்: அதற்கு, (அவரது) மனைவி என்ன வியஷங்களை கூறினார்? என்று எனக்கு கூறுங்கள் என்று நான் கேட்டேன். அதற்கு அன்னார் கூறினார்கள்:

இல்லை ; அவரோ என் மீது நம்பிக்கை வைத்து விஷயங்களை கூறியிருக்கின்றார்; உனக்கு நான் கூற மாட்டேன்; அவர் சுயமே உன்னிடம் கூற விரும்பினால் கூறிவிடுவேன். ஆனால், அவர்களுக்கிடையில் சமாதானத்தை உருவாக்குவதற்கு முயற்சி செய்!

கிலாஃபத்துடன் மிகவும் ஆழமான தொடர்பு இருந்தது. மேலும் குத்பாக்களை மிகவும் கவனத்துடன் கேட்டு வந்தார்கள். இன்னும் கூறப்போனால், அன்னாரின் மகன் வழிப் பேரர் எழுதியுள்ளார்:

இரண்டு, மூன்று முறை அன்னார் கேட்டு வந்தார்கள். முதல் முறை புரிவதில்லை

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

; மேலும், நல்ல முறையில் கேட்கவில்லை என்றால் பின்னர் எந்தப் பயனும் இல்லை என்று அன்னார் கூறினார்கள். அல்லாஹ்வின் மிகவும் உறுதியான தொடர்பு இருந்தது. கனவு காணக் கூடிய பெண்மணியாக இருந்தார்கள். அன்னாருடைய பல கனவுகள் உண்மையானவை என்று நிரூபணமாகியுள்ளன. தற்போது இதே நோய்வாய்ப்பட்ட இறுதி நாட்களில் நடந்த விஷயமாகும். ஸுபைர் ஸாஹிப் எழுதுகின்றார்கள்:

எனக்கு கேன்ஸர் ஒன்றும் இல்லையே? என்று அன்னார் கேட்டார்கள். சி.டி ஸ்கேன் செய்தபோது உண்மையில் "சிறுநீர்ப்பை புற்றுநோய்" இருப்பது தெரிய வந்தது. அப்போது, அன்னாரிடம் உங்களுக்கு எப்படி தெரிய வந்தது? என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு, எனக்கு "அல்லாஹ் கூறிவிட்டான்" என்று அன்னார் கூறினார்கள். அன்னாரின் மரணமடைந்திருந்த ஓர் அன்பர் இருந்தார். அந்தப் பெண்மணி கனவில் வந்தார்; மேலும், அவர் கூறினார்: நீங்கள் கவலையடைந்து விடுவீர்கள் என்று கருதி உமது மகன் அநேகமாக உன்னிடம் கூறாமல் இருக்கலாம்; ஆனால், உமக்கு கேன்ஸர் உள்ளது என்று நான் உமக்கு கூறுகின்றேன்.

ஆக, இவ்வாறு அல்லாஹ் அன்னாருக்கு அன்னாரது நோயைக் குறித்தும் முன்னரே கூறிவிட்டான். அன்னாரின் மருமகள்கள் ஜெர்மனியில் இருக்கின்றனர். அவர்களுடனும் அன்னார் எப்படிப்பட்ட தொடர்புகள் வைத்திருந்தார்கள் என்றால் அவர்களுக்கு தர்பிய்யத் வழங்கினார்கள் மேலும் அவர்கள் இருவரும் ஜெர்மானியர்களாக இருந்தபோதிலும், ஒவ்வொரு விவகாரத்திலும் அன்னாரிடம் ஆலோசனை பெறக் கூடியவராக இருந்தனர். மேலும் அன்னாரைப் போன்று எல்லா வகையான தியாகங்களும் செய்யக் கூடியவர்களாக அந்த மருமகள்கள் இருக்கின்றனர். அன்னாரின் ஒரு மருமகள் ஸேஸன் ஸுபைர் கூறுகின்றார்கள்:

மாமியார் என்ற ரீதியில் அவர் பரிவு மற்றும் கருணை உள்ளத்திற்கான ஒளிமயமான முன்மாதிரியாக இருந்தார்கள். மிகவும் அன்பு செலுத்தி வந்தார்கள். எங்களையும் மிகவும் நேசத்துடன் சீர்படுத்தி வந்தார்கள். மேலும், எப்போதும் எங்களுக்காக துஆவும் செய்து வந்தார்கள். இரண்டாவது மருமகள் மாரியா ஸுபைர் ஆவார்கள். அவர்களும் கூறுகின்றார்கள்:

நான் திருமணம் செய்து வந்தபோது, எனக்கு உணவு சமைப்பதற்கும், விருந்தினர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்வதற்கான வழிமுறையையும் கற்றுக் கொடுத்தார்கள். மேலும் எந்த அழுத்தமும் அல்லது விமர்சனமும் இன்றி எனக்கு இந்த விஷயங்களை கற்றுக் கொடுத்தார்கள். மேலும் அன்னார் எனது படிப்பின்போதும் மிகவும் பணி செய்துள்ளார்கள்.

பின்னர் அன்னாருடைய அந்த மருமகள் மருத்துவம் படித்தார்கள்.

மேலும் கூறுகின்றார்கள்:

ஜமாஅத்தின் நிகழ்ச்சிகளிலும் எனக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள். என்னையும், பிள்ளைகளையும் பார்த்துக் கொண்டார்கள். எப்போதும் தைரியம் வழங்கி வந்தார்கள்.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! மேலும் அவர்களின் பிள்ளைகளையும் அன்னாரின் துஆக்களுக்கு வாரிசாக்குவானாக! (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், ஜுலை 23, 2025, பக்கம் 7- 13)

தமிழாக்கம்
முரப்பி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

12ம் பக்கத் தொடர்ச்சி.. (குத்பா பேருரை 11.7.25....)

ஹரமில் நுழைந்தபோது, ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் தமது தந்தையாரை அழைத்துக் கொண்டு இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரைக் கண்டபோது, அபூ பக்ரே! நீங்கள் இந்த வயதான நபரை வீட்டிலேயே வைத்திருக்கலாமே? இவ்வளவு வயதுடைய நபரை என்னிடம் அழைத்து வந்துள்ளீர்களே ; நானே அன்னாரிடத்தில் வந்திருப்பேனே? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு, ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இவர்கள் தங்களின் சமூகத்தில் ஆஜராகுவதற்கு தகுதியானவரே தவிர தாங்கள் அன்னாரிடம் செல்வதற்கு இவர்கள் தகுதியானவர் கிடையாது. ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் அவரை இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு முன்னால் அமர்த்தினார்கள். அப்போது அன்னார் (ஸல்) அவருடைய மார்ப்பின் மீது கையை வைத்து தடவினார்கள். மேலும் கூறினார்கள்: இஸ்லாத்தை தழுவி விடுங்கள்; தங்கள் மீது சாந்தி உண்டாகட்டுமாக!

ஆக, அன்னார் (அதாவது ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களின் தந்தையார்) இஸ்லாத்தை தழுவி விட்டார்கள். (அல் அஸாபா ஃபீய் தம்மீஸுஸ் ஸஹாபா ,தொகுதி 4, பக்க் 374- 375, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஒரு குறிப்பு உம்மே ஹானீ (ரலி) அவர்களின் வீட்டில் அன்னார் (ஸல்) உணவு உண்டது பற்றிய குறிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அன்னார் (ஸல்) மக்கா வெற்றி நாளன்று ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்களிடம் கூறினார்கள்:

நாம் உண்பதற்கு உம்மிடத்தில் உணவு இருக்கின்றதா? அதற்கு, காய்ந்த ரொட்டித் துண்டுகளைத் தவிர வேறு எதுவும் இல்லை ; மேலும், அதனை தங்களின் சமூகத்தில் தங்கள் முன் வைப்பதற்கு எனக்கு வெட்கம் வருகின்றது என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அதனை எடுத்துக் கொண்டு வாருங்கள்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அன்னார் (ரலி) அதனை தண்ணீரில் நனைத்துவிட்டார்கள். அன்னார் உப்பையும் எடுத்துக் கொண்டு வந்தார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்: குழம்பு ஏதாவது இருக்கின்றதா என்ன? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடம் வினிகரைத் தவிர வேறு எதுவும் இல்லை என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அந்த வினிகரை கொண்டு வாருங்கள்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அன்னார் (ஸல்) அதனை உணவில் ஊற்றினார்கள். மேலும் அதிலிருந்து உண்டார்கள். மேலும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தினார்கள். பின்னர் கூறினார்கள்:

வினிகர் எவ்வளவு நல்ல குழம்பு ஆகும்! உம்மே ஹானீயே! எந்த வீட்டில் வினிகர் இருக்குமோ அவர் ஏழையாக அல்ல. (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 235,தாருல் குதுபில் இல்மியா,பெய்ரூத்)

நன்றியுணர்வின் உச்சம் ஆகும். உம்மே ஹானீ (ரலி) அவர்களுக்கு ஊக்கமும் அளித்தார்கள். இது மக்கா வெற்றியாளரின் நிலைமையாகும். அப்போது ஒவ்வொரு வீட்டிலிருந்தும் அனைத்தும் கிடைக்கக் கூடியதாக இருந்தது. ஆனால், அன்னார் (ஸல்) அந்த சிறிய காய்ந்த ரொட்டித் துண்டுகளை அந்த நேரத்தில் உண்டார்கள்.

அன்னார் (ஸல்) மக்காவை வந்தடைந்தபோதும், அங்கு எல்லா விஷயத்தையும் குறிப்பாக கஅபத்துல்லாஹ்வின் நேசத்துடன் கண்டதனால் அன்ஸார் ஸஹாபிகளின் உள்ளத்தில் , ஒருவேளை அன்னார் (ஸல்) இங்கேயே தங்கி விடுவார்களோ என்ற சந்தேகம் தோன்றியது. அன்பு இருக்கும் இடத்தில் ஆயிரம் சந்தேகங்கள் இருக்கும் என்ற பழமொழி பிரபலமாகும். ஒரு நேசம் இருக்கின்றது. அத்துடன் ஆயிரக்கணக்கான தப்பெண்ணங்களும் சந்தேகங்களும் இருக்கின்றன. நேசம் கொள்ளக் கூடியவர் எப்போதும் தனது நேசரைப் பற்றியே கவலை கொண்டவராக இருக்கின்றார். அன்பு, நேசம், அழகு மற்றும் நன்றியுணர்விற்கான ஏராளமான காட்சிகள் மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்தின்போது காணக் கிடைத்தது. அவற்றில் மிகவும் தூய்மையான, மற்றும் ரசனை நிறைந்த ஒரு காட்சி மதீனத்து அன்ஸார் ஸஹாபிகளின் புறமிருந்து காணக் கிடைத்தது.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள்; மேலும் மக்காவில் நுழைந்தார்கள். மேலும் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஜ்ரே அஸ்வத் பக்கம் சென்றார்கள். மேலும், அதனை முத்தமிட்டார்கள். அதாவது ஹஜ்ரே அஸ்வதை முத்தமிட்டார்கள். பின்னர் பைத்துல்லாஹ்வை வலம் வந்தார்கள். **(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்.....)**

தமிழாக்கம்
முரப்பி அப்துர்ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *





# ஜுமுஆ பேருரை

**மக்கா வெற்றிப் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை**

ஹிஜ்ரத்திற்கு முன்னர் ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸ்ல்) அவர்கள், உஸ்மான் பின் தல்ஹா அவர்களிடம் கஅபாவின் திறவுகோலை கேட்டார்கள்; அப்போது, அவர் பதில் அளித்தவாறு இறைத் தூதர் (ஸல்) அவர்களை ஏசிபேசினார். மேலும், மிகவும் மோசமான வார்த்தைகளை பயன்படுத்தினார். அன்னார் (ஸல்) அந்த நேரத்தில் மிகவும் பொறுமையை மேற்கொண்டார்கள். மேலும், கூறினார்கள்:

يَا عُثْمَانُ لَعَلَّكَ سَتَرَى هٰذَا الْمِفْتَاحَ يَوْمًا بِيَدِيْ أَضَعُهُ حَيْثُ شِئْتُ

பொருள்: உஸ்மானே! நினைவிற் கொள்; இந்த திறவுகோல் ஒருநாள் இல்லையென்றால் ஒருநாள் எனது கைக்கு வரும்; மேலும், நான் எனது விருப்பத்தின்படி எவருக்கு விரும்புவேனோ அவருக்கு கொடுப்பேன்.

மக்கா வெற்றி நாளன்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கஅபத்துல்லாஹ்வில் இருந்து வெளியில் வந்தவாறு உஸ்மான் பின் தல்ஹா அவர்களை அழைத்தார்கள். மேலும் அன்னாரிடம் திறவுகோலை திருப்பிக் கொடுத்து விட்டார்கள்; மேலும், اَلْيَوْمُ يَوْمُ بِرٍّ وَوَفَاءٍ என்று கூறினார்கள்.

பொருள்: இன்று நன்மை மற்றும் உடன்படிக்கையை நிறைவேற்றுகின்ற நாளாகும்

தற்போதைய உலகின் நிலைமைகளுக்காக தொடர்ந்து துஆக்களும் செய்யுமாறு அத்தியாவசிய பொருட்களை சேமித்து வைக்குமாறும் அறிவுரை

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 11 ஜுலை 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **வஃபா** மாதம் **11 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த குத்பாவில் எடுத்துரைக்கப்பட்டது போன்று மக்கா வெற்றிக்கு முன்பு கஅபத்துல்லாஹ்வின் திறவுகோல் உஸ்மான் பின் தல்ஹா அவர்களிடம் இருந்தது. மக்கா வெற்றி நிகழ்ந்தபோது, அந்நேரத்தில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஸகாயா எனும் தண்ணீர் வழங்குதல் பொறுப்புடன் திறவுகோலை நிர்வகிக்கும் பொறுப்பையும் தமக்கு வழங்கும்படி விண்ணப்பித்தார்கள். அதாவது தற்போது திறவுகோலை தமக்கு கொடுக்கும்படி கேட்டார்கள். ஆனால், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கஅபத்துல்லாஹ்வில் இருந்து வெளியில் வந்தவாறு உஸ்மான் பின் தல்ஹா அவர்களை அழைத்தார்கள். மேலும் அன்னாரிடம் திறவுகோலை திருப்பிக் கொடுத்து விட்டார்கள்; மேலும்,

اَلْيَوْمُ يَوْمُ بِرٍّ وَوَفَاءٍ

என்று கூறினார்கள். பொருள்: இன்று நன்மை மற்றும் உடன்படிக்கையை நிறைவேற்றுகின்ற நாளாகும்.

அந்த நேரத்தில் உஸ்மான் பின் தல்ஹா முஸ்லிம் ஆகிவிட்டிருந்தார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு ஏன் கூறினார்கள்? என்பதற்கான விளக்கம் இவ்வாறு வருகின்றது: அதாவது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்திற்கு முன்னர் ஒருமுறை உஸ்மான் பின் தல்ஹா அவர்களிடம் கஅபாவின் திறவுகோலை கேட்டார்கள்; அப்போது, அவர் பதில் அளித்தவாறு இறைத் தூதர் (ஸல்) அவர்களை ஏசிபேசினார். மேலும், மிகவும் மோசமான வார்த்தைகளை பயன்படுத்தினார். அன்னார் (ஸல்) அந்த நேரத்தில் மிகவும் பொறுமையை மேற்கொண்டார்கள். மேலும், கூறினார்கள்:

يَا عُثْمَانُ لَعَلَّكَ سَتَرَى هٰذَا الْمِفْتَاحَ
يَوْمًا بِيَدِيْ أَضَعُهُ حَيْثُ شِئْتُ

பொருள்: உஸ்மானே! நினைவிற் கொள்; இந்த திறவுகோல் ஒருநாள் இல்லையென்றால் ஒருநாள் எனது கைக்கு வரும்; மேலும், நான் எனது விருப்பத்தின்படி எவருக்கு விரும்புவேனோ அவருக்கு கொடுப்பேன்.

உஸ்மான் அந்த நேரத்தில் இவ்வாறு பதில் அளித்திருந்தார்: அப்படி ஒரு காலம் வந்தால் பின்னர் அதுவோ குறைஷியர்களின் அழிவு மற்றும் இழிவின் காலமாக இருக்கும். அப்போது அன்னார் (ஸல்) கூறினார்கள்:

بَلْ عَمَرَتْ وَعَزَّتْ يَوْمَئِذٍ

பொருள்: அப்படியல்ல! மாறாக, அந்த காலமோ குறைஷியர்களின் மக்கள் தொகையும், கண்ணியமும், பெருமையும் அதிகரிக்கும் காலமாக இருக்கும்.

இந்த அனைத்து அநீதிகளும் அன்னாருடன் செய்யப்பட்டிருந்தன. அந்த நேரத்தில் அன்னாருக்கு அது நினைவு இருந்தது. ஆனால், அவ்வாறிருந்தபோதிலும், அன்னார் (ஸல்) அந்த மக்கள் மீது கருணையும், பரிவும் காட்டினார்கள்.

ஓர் அறிவிப்பில் உஸ்மான் பின் தல்ஸா (ரலி) அவர்கள் சுயமே அறிவிக்கின்றார்கள்: அறிவீனமான காலகட்டத்தில் நாங்கள் திங்கட்கிழமை மற்றும் வியாழக்கிழமை ஆகிய நாட்களில் கஅபத்துல்லாஹ்வை திறந்து வந்தோம். ஒருநாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். மேலும், சில மக்களுடன் கஅபத்துல்லாஹ்விற்குள் செல்ல விரும்பினார்கள். அப்போது நான் அன்னாருடன் கடுமையான உரையாடல் நிகழ்த்தினேன். ஆனால், அன்னார் (ஸல்) மிகவும் மென்மையுடன் உரையாடினார்கள். மேலும் கூறினார்கள்:

உஸ்மானே! ஒரு நாள் இந்த திறவுகோல் எனது கையில் (வருவதை) நீர் காண்பீர்! மேலும், அப்போது நான் விரும்பியவருக்கு அதனை கொடுப்பேன்.

இன்று அந்த நாளாகவே இருந்தது. இந்த அனைத்து விஷயங்களும் உஸ்மான் (ரலி) அவர்களுக்கும் நினைவு இருந்திருக்கும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அந்த நாளை மறந்திருக்கவில்லை. எனினும், அன்னார் (ஸல்) அவரிடம் கூறினார்கள்:



GRIZZLY
BE ALWAYS AHEAD
Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 14 AUG 2025 Issue No.33

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

உஸ்மானே! உமது திறவுகோலை பாதுகாத்துக் கொள்வீராக!

இதன் பின்னரும் அன்னார் (ஸல்) அவரிடம், இதோ பெற்றுக் கொள்ளுங்கள்; திறவுகோலை இன்று நான் உமக்கு தருகிறேன்; இன்று நன்மை மற்றும் உடன்படிக்கையை நிறைவேற்றுகின்ற நாளாகும். இந்த திறவுகோலை நிரந்தரமாக பெற்றுக் கொள்ளுங்கள்; உம்மிடமிருந்து அநீதியாளர் மட்டுமே அதனை பறிப்பார். (ஸீரத்துன் நபி (ஸல்) அவர்கள் டாக்டர் ஸலாபி, தொகுதி 3, பக்கம் 415 -416, தாருல் ஸலாம்)

தற்போது இது உமது குடும்பத்தில் இருக்கும். எனவே இன்று வரை கஅபத்துல்லாஹ்வின் திறவுகோல் அதே குடும்பத்தில் தலைமுறை தலைமுறையாக இருந்து வருகின்றது.

அறிவிப்பில் வருகின்றது: மக்கா வெற்றி நிகழ்ந்த இரண்டாம் நாள், பனூ குஸாஆ கோத்திரத்தார் ஹுஸைல் கோத்திரத்தின் ஒரு இணை வைப்பாளரை கொன்று விட்டனர். அப்போது இறைத் தூதர் (ஸல்) அவர்கள் லுஹர் தொழுகை நேரத்தில் குத்பா கொடுப்பதற்காக எழுந்து நின்றார்கள். அன்னார் (ஸல்) தமது இடுப்பை கஅபத்துல்லாஹ்வுடன் சாய்த்து வைத்திருந்தார்கள். அங்கு சாய்ந்திருக்கின்றார்கள். மேலும் ஓர் அறிவிப்பில் உள்ளது:

அன்னார் (ஸல்) தமது ஒட்டகத்தில் அமர்ந்திருந்தார்கள்; மேலும் அல்லாஹ்வின் புகழையும், தூய்மையும் எடுத்துரைத்தார்கள்.

மக்களே! அல்லாஹ் எந்த நாளில் வானங்கள் மற்றும் பூமியை படைத்தானோ மேலும் எந்த நாளன்று அவன் சூரியனையும், சந்திரனையும் படைத்தானோ மேலும் ஸஃபா மர்வா என்ற இந்த இரண்டு மலைகள் நிறுவப்பட்ட அந்த நாளிலிருந்து மக்காவை புனிதமாக்கி விட்டான். அதனை மக்கள் புனிதமாக்கவில்லை. அன்னார் (ஸல்) கூறினார்கள்:

அதனை மக்கள் புனிதமாக்கவில்லை. மாறாக, அல்லாஹ் ஆக்கியுள்ளான். இது கியாமத் நாள் வரை புனிதமாக உள்ளது. எனவே எந்த நபர் அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் ஈமான் கொண்டுள்ளாரோ அவருக்கு இதில் இரத்தம் சிந்தச் செய்வதும், மரத்தை வெட்டுவதும் ஆகுமானது கிடையாது. எனக்கு முன்பும் ஹலால் ஆக்கப்படவில்லை. எனக்குப் பிறகும் எவருக்காகவும் ஹலாலாக இருக்காது. எனக்காக இந்த குறிப்பிட்ட நேரம் வரைதான் ஹலால் ஆக்கப்பட்டிருந்தது. பின்னர் அதன் புனிதத்துவம் நேற்று இருந்தது போன்றே திரும்பி வந்துவிட்டது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் இதில் போர் புரிந்தார்கள் என்று கூறக் கூடிய நபரிடம், தற்போது (இங்கு) இருப்பவர் இல்லாதவரிடம் கூறட்டும்; அல்லாஹ் அதனை தனது தூதருக்காக ஹலால் ஆக்கியிருந்தான். மேலும், உங்களுக்கு ஹலால் கிடையாது என்று கூற வேண்டும். மக்களே! மக்களில் அல்லாஹ்விடம் எல்லாரையும் விட அதிக துணிச்சல் உள்ளவர் யாரென்றால், எவர் ஹரமில் கொலை செய்தாரோ அல்லது தனது கொலையாளியைத் தவிர வேறு ஒருவரை கொலை செய்தாரோ அல்லது அறிவீனமான காலகட்டத்தின் கொலைக்குப் பழிதீர்த்துக் கொள்கிறாரோ அவர் ஆவார்.

பனூ குஸாஆ கோத்திரத்தாரே! கொலையிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் ஒருவரை கொலை செய்துள்ளீர்கள். நான் அதற்கு ஈட்டுத் தொகையை வழங்கிவிடுவேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்:

நான் வழங்குவேன்; தற்போது அதற்கான இழப்பீடு உடன்படிக்கை ஆகும். எனது உத்திரவாதத்திற்குப் பிறகு ஒருவரை எவர் கொலை செய்வாரோ, (கொலையுண்ட) அவருடைய குடும்பத்தினருக்கு இரண்டு அதிகாரம் இருக்கும்; அதாவது அவர்கள் விரும்பினால் இழப்பீட்டை பெற்றுக் கொள்ளலாம்; அவர்கள் விரும்பினால் அவரை கொன்று விடலாம். பின்னர் அன்னார் (ஸல்) பனூ குஸாஆ எந்த நபரை கொலை செய்திருந்தார்களோ அந்த நபரின் இழப்பீட்டுத் தொகையாக நூறு ஒட்டகங்கள் கொடுத்து விட்டார்கள். அவர்களின் சார்பாக அன்னார் (ஸல்) இழப்பீட்டுத் தொகையை செலுத்தி விட்டார்கள். (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 256- 257, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

அதே நாட்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கான ஃபழாலஃ பின் உமைருடைய தீய சதித் திட்டமும் வெளிப்பட்டது. அதன் விளக்கம் இவ்வாறாகும்:

மக்கா வெற்றி நாளன்று ஏராளமான மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தனர் என்றால், அவர்கள் உள்ளுக்குள் வெறுப்பும் பகைமையும் கொண்டிருந்தனர் ; ஆனால், அவர்கள் இயலாதவர்களாக இருந்தனர். இதே காரணத்தினால் தான், மக்காவின் சில துணிச்சல் மிக்க இளைஞர்கள் உதாரணமாக இக்ரிமா போன்றோர் முறையாக குழுவை உருவாக்கி ஓரிடத்தில் நின்று கொண்டு ஆயுதங்களையும் ஏந்தி சண்டையுமிட்டனர். இதே போன்ற எண்ணம் கொண்டவர்களில் ஒருவராக ஃபழாலஃ பின் உமைர் என்பவரும் ஒருவராக இருந்தார்.

இவர் கூறினார்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கஅபத்துல்லாஹ்வை வலம் வந்து கொண்டிருக்கும்போது நானும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டுவிடுகிறேன். மேலும், இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்ற உடனேயே நான் மறைவாக எனது கத்தியால் தாக்குதல் நடத்தி அன்னார் (ஸல்) அவர்களை கொன்று விடுவேன்.நவூதுபில்லாஹ்!

அவர் இந்த எண்ணத்துடன் அன்னாரை பின்தொடர்ந்து சென்றுவிட்டார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்ற உடனேயே அன்னார் (ஸல்) அவரைப் பார்த்து விட்டார்கள்; கூறினார்கள்: நீர் ஃபழாலஃ தானே? என்று கேட்டார்கள். ஆம்! சரிதான் எனறு அவர் கூறினார்: உள்ளதில் என்ன எண்ணம் கொண்டுள்ளீர்? நான் அல்லாஹ்வை நினைவு கூர்ந்து கொண்டிருக்கின்றேன் என்று கூறினேன். அவர் பொய் கூறினார்.

அப்போது அன்னார் (ஸல்) சிரித்தவாறு கூறினார்கள்: அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேளுங்கள்; நீங்கள் என்ன கூறிக் கொண்டிருக்கிறீர்களோ அதனை நீங்கள் செய்யவில்லை. மேலும், அன்னார் (ஸல்) அவருக்கு அருகில் சென்றார்கள்; மேலும் அவரது நெஞ்சின் மீது கை வைத்தார்கள்.


ஃபழாலஃ கூறுகின்றார்கள்: இறைவன் மீது ஆணையாக! அன்னார் (ஸல்) எனது நெஞ்சிலிருந்து கையை எடுக்கவில்லை அதற்குள் உலகில் எல்லாரையும் விட அதிக நேசத்திற்குரியவராக எனக்கு முஹம்மது (ஸல்) அவர்களே தோன்றினார்கள். மேலும், அவர் தமது வீடுகளின் பக்கம் திரும்பி வந்துவிட்டார்கள். (ஸுபுலுல் ஹுதா, தொகுதி5, பக்கம் 232, ஸாவியா பப்ளிஷர்ஸ் லாஹூர்)

இந்த எண்ணத்துடன் சென்றிருந்தார்; ஆனால், அதன் பிறகு அவரது நிலை தலைகீழாக மாறிவிட்டது.

அதே நாட்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)அவர்களின் தந்தையாரின் இஸ்லாத்தை தழுவும் சம்பவத்தைப் பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களின் தந்தையார் அவர்கள் மக்கா வெற்றி வரை ஈமான் கொண்டிருக்கவில்லை. அந்த நேரத்தில் அன்னாரின் கண்பார்வையை இழந்திருந்தார்கள். மக்கா வெற்றியின் நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

இதன் தொடர்ச்சி. 10-ம் பக்கம் .....

**National Watch Company**
**Sales & Service**


**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad